ஆண்டு சந்தா ரூ. 7—0—0

திராவிடநாடு

மலர் 13 | 29—5—55 | இதழ் 47

47

மகாரியாஸ்

2 அணா

Best copy available.

மந்தாரப்பூ

தம்பி,

உலகமெல்லாம் எங்கள் நேருஜியைப் புகழ்கிறது — உதவாக்கரைகளே! நீங்கள் அவருடைய ஆட்சியை, அவர் நடத்திச்செல்லும் காங்கிரஸ் கட்சியைக் கண்டிக்கிறீர்களே, இது முட்டாள்தனமல்லவா, போக்கிரித்தனமல்லவா, என்றெல்லாம் மேடை அதிர அதிரக் காங்கிரசார் பேசுகிறார்கள் என்று எடுத்துக்காட்டியிருக்கிறாய். உலகம் புகழ்கிறது என்பதற்கு ஆதாரமாக நேரு பண்டிதர் சர்வதேச விவகாரங்களிலே கலந்துகொள்வதையும், அவர் பல்வேறு நாடுகளிலே பவனி வருவது, ராஜோபசாரம் பெறுவது ஆகியவற்றையும் சுட்டிக்காட்டுகிறார்கள். அமெரிக்கா சென்றார். சீனா சென்றார், இந்தோ சீனா சென்றார், இந்தோனேஷியா சென்றார், சீமைக்குப் பலதடவை சென்றார், இதோ இப்போது ரஷ்யாவுக்குப் போகப்போகிறார் என்று பெருமிதத்துடன் கூறுகிறார்கள்.

உலகம் இருவேறு முகாம்களாகி இருப்பது உனக்குத் தெரியும்.

ஒரு முகாமில் கம்யூனிஸ்டு ஆட்சி முறை நாடுகளும், மற்றோர் முகாமில் அதற்கு எதிரிடையான ஆட்சி முறை நாடுகளும் உள்ளன.

இரு முகாம்களும், தத்தமது கட்சிக்கு ஆள்பிடிக்கும் காரியத்தில் ஈடுபட்டுவிட்டிருக்கின்றன. தன் கட்சியில் சேராவிட்டாலும் பரவாயில்லை, எதிர்க்கட்சியில் சேராதிருந்தால் போதும், நடு நிலைமை வகித்தால் போதும் என்று பாடுபடுகின்றன.

இதற்காக, புகழுரை, பாராட்டுரை, உபசாரம், விருந்து, இவைகளை அள்ளி அள்ளி வீசுகின்றன.

பணம் தேவையா, தாராளமாகத் தருகின்றன! நிபுணர்கள் வேண்டுமா, கப்பல் கப்பலாக அனுப்பி வைக்கிறார்கள்.

இந்தப் புகழுரை, போதை தருமளவு தரப்படுகிறது! நேரு பண்டிதர் இதிலே மயங்கிவிட்டாரோ இல்லையோ தெரியவில்லை, காங்கிரஸ் ஏடுகளிலே வெளியிடப்படும் படங்களையும் செய்திகளையும் பார்த்துப் - பார்த்துப் பூரித்துப் போகிறார்கள். இதே விதமான உபசாரம் நேரு பண்டிதருக்கு மட்டுமல்ல, இலங்கை கொத்தலாவலைக்கும் பிலிப்பைன் தீவு ராமுலோவுக்கும், வழங்கப்படுவதை, காங்கிரசார் கவனிக்கவில்லை. நேரு பண்டிதரின் பீகிங் விஜயத்தின்போது ராஜோபசாரம் நடந்ததென்றால், அதேவிதமான உபசாரம் பர்மியப் பிரதமர் சென்றபோதும் நடக்கிறது!

தம்பி! டிட்டோ இங்கு வந்தார்! ராஜோபசாரம் எப்படி எப்படிச் செய்தார்கள்! அவர் வருகிற கப்பலை நமது கப்பல்கள் சென்று எதிர்கொண்டழைத்தன! டில்லியில் மக்கள் கூடி டிட்டோ ஜிந்தாபாத் போட்டனர்! மாலைகள் குவிந்தன! விருந்துக்குமேல் விருந்து! வரவேற்பு வைபவம், டிட்டோவைத் திணறடிக்கும் அளவுக்கு நடந்தது. ஆவடி காங்கிரசிலும், ராஜபவனத்திலும் அவருக்கு நடைபெற்ற பல்வேறு வகையான விருந்துகளும், கலா காட்சிகளும் சாமான்யமா!

இப்போது ஆறு நாட்கள் நேரு பண்டிதர் டிட்டோவின் விருந்தாளியாக, யுகோ நாடு செல்கிறார். டிட்டோ என்ன, பண்பு அறியாதவரா! நேரு பண்டிதரின் மனம் குளிரும்வண்ணம், தனக்கு இந்தியாவிலே கிடைத்த வரவேற்புச் சாமான்யம் என்று கூறத்தக்கவிதமாக, விருந்தும், உபசாரமும் ஏற்பாடு செய்யாமலிருப்பாரா!

பார், பார்! எங்கள் பண்டிதருக்கு யுகோவில் கிடைக்கும் ராஜோபசாரத்தை என்று பேசிப் பூரித்துப் போவதால் என்ன பலன்! டிட்டோ இங்கு வந்திருந்தபோது, இங்கே அவருக்கு நடைபெற்ற ராஜோபசாரத்தைப் பற்றி, யுகோ நாட்டுப் பத்திரிகைகள் சக்கைப்போடு போட்டன!

டிட்டோவுக்கு இந்தியாவில் இணையில்லா வரவேற்பு.

ராஜபவனத்தில் ரசமான விருந்து.

மகாராஜாக்கள் மலர்மாரி பொழிந்தனர்.

மதுரமான இசைவிருந்து அளிக்கப்பட்டது.

நேர்த்தியான நாட்டியம்.

இந்தியாவின் தொழில் முயற்சியை டிட்டோ பார்வையிட்டார்.

இவ்விதமெல்லாம் யுகோநாட்டுத் தினமணிகள் தலைப்புகள் தரத்தான் செய்தன, தம்பி!

இவ்வளவு என்ன, இங்கே உள்ள பத்திரிகைகள், பாண்டுங் மாநாடு நேருவின் வெற்றி என்று புகழ்ந்தன அல்லவா, எகிப்து நாட்டிலே நாசிர், பாண்டுங் மாநாட்டுக்குப் பிறகு சென்றதும், அவரை வரவேற்க மோட்டாரிலும் குதிரைமீதும் ஒட்டகைமீதும் கால்நடையாகவும் பல்லாயிரக்கணக்கான எகிப்தியர் வந்தனர். அவர்கள் என்ன முழக்கமிட்டனர் தெரியுமோ,

பாண்டுங் வீரரே வருக!

இந்தியாவை வசீகரித்த இணையில்லாத்

தலைவரே வருக!

இப்படித்தான்!

இந்தோனேஷியாவில் தெரியுமா! இருபத்து ஒன்பது நாடுகளும் பெருமைப்படுத்திய தலைவர்களே, வாழ்க! என்று அந்த நாட்டு இதழ்

முகப்புப் படம்

சைப்ரஸ் தீவு கிரீசுடன் இணைந்திருக்க வேண்டும்—பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இருக்கக் கூடாது என்பதற்கான விடுதலைப் போர் மகாரியாஸ் எனும் பாதிரியார் தலைமையில் நடைபெற்று வருகிறது. மாணவர்கள் பெருங்கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். பலர் தண்டிக்கப்படுகிறார்கள். மகாரியாஸ், வருமான வரியைப் பிரிட்டனுக்குச் செலுத்த முடியாது என்று முழக்கமிடுகிறார்; பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தப்படும் விடுதலைப் போரின் 'ஜீவநாடி'யாக இந்தச் சாது விளங்கி வருகிறார்!!

கள், சுகர்னோ, ஜோஜோ ஆகிய தலைவர்களைப் புகழ்ந்து எழுதின!

ஒருவர்க்கொருவர் உபசாரத்தைப் பொழிந்துகொள்வது, இன்றைய உலகிலே கொழுந்துவிட்டெரியும் புதுமுறை! இதைக் கொண்டு, தப்புக் கணக்குப் போடுகிறார்கள் தம்பி! அவ்வளவுதான்!

அமெரிக்கா உறவுபற்றியும், அந்த நாட்டினிடம் உதவியும் கடனும் பெறுவதால் ஏற்படக்கூடிய இழிவு, ஆபத்துபற்றியும் ஆச்சாரியாரே சொல்லிச் சோகிக்கவேண்டி நேரிட்டதைக் காங்கிரஸ் நண்பர்கள் மறந்துவிடுகிறார்கள்!

உலகமே உள்ளன்புடன் நேரு பண்டிதரைப் புகழ்கிறது என்றே வைத்துக்கொள்வோம், அதனால், அவருடைய ஆட்சியிலே காணக் கிடக்கும் அவலட்சணங்களை, அதனால் ஏற்படும் அவதிகளை, குறிப்பாகத் திராவிடத்துக்கு ஏற்படும் தீமைகளை எடுத்துக்காட்டாதிருக்க முடியுமா! எடுத்துக்காட்டாதிருப்பது, அறிவுடைமைதானாகுமா!!

'மத்தாப்பூ' கொளுத்தும்போது பார்த்திருப்பாயே தம்பி! எவ்வளவு வண்ணம், எத்தனை ஒளி! ஆனால் தம்பி! எவ்வளவு சீக்கிரத்தில் தீர்ந்து போய்விடுகிறது! அது போலத்தான், ராஜதந்திரமுறை காரணமாக நடத்தப்படும் உபசாரம் தரும் ஒளி! சிறு அகல் விளக்கானாலும் பரவாயில்லை, மத்தாப்பூ போல அல்ல, நின்று நிதானமாக ஒளிவிட்டு இருளை அகற்றும். அதுபோலத்தான் உள்நாட்டிலே மக்களின் உள்ளம் குளிரும்படி ஆட்சி நடத்தினால், நிரந்தரமான பெருமையும், நிலையான செல்வாக்கும் கிடைக்கும். வெறும் நேத்திரானந்தால் பலன் என்ன?

நேரு பண்டிதரின் 'உலகப்புகழ்' பற்றி ஓயாமல் பண்பாடும் பத்திரிகைகளே, உள்நாட்டு விவகாரத்தில், ஆட்சியின் கோணல் காரணமாக ஏற்படும் அவதிகளைச் சுட்டிக் காட்டி, மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல், திண்டாடித் திணறுவது தெரியாதா! பழமொழி சொல்வார்களே, உப்புக் கண்டம் பறிகொடுத்த பார்ப்பனத்தி என்று. அதுபோலல்லவா தேசிய ஏடுகளின் நிலைமை ஆகி விடுகிறது!

நாற்றமடிக்குமளவுக்கு ஊழல்கள் நிர்வாகத் துறையில்! நாலு நாளைக்கொரு முறை மாற்றித் தீரவேண்டியவிதமாக அவசரமாகத் தீட்டப்படும் திட்டங்கள்.

முன்யோசனை இல்லாததால் ஏற்படும் கோடிக்கணக்கான பொருள் நஷ்டம்.

வீண் ஆடம்பரத்துக்காக விரயமாகும் பெரும் பணம்.

காகிதத் திட்டங்கள்! அவரைப்பற்றிக் கவைக்குதவா பாராட்டுரைகள்!

தம்பி! பார், பார், பண்டிதரின் புகழொளியைப் பார்! என்று படம் காட்டுகிறார்களே காங்கிரஸ் நண்பர்கள், அவர்கள் மறந்துவிட்டிருப்பார்கள், அல்லது தெரியாதது போலப் பாவனை காட்டுவார்கள், நீ மறந்திருக்கமாட்டாயே, பத்து நாட்களுக்கு முன்பு பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை.

உலகமே கண்டு வியக்கிறது. எங்கள் பெரும் பெரும் அணைத் திட்டங்களை என்று பெருமை பேசினார்களே, அதிலே காணக் கிடக்கும் கோளாறு, வெளிவந்துவிட்டது.

கோடி கோடியாகப் பொருள் செலவிட்டு, பெரும் பெரும் நூதனமான யந்தரங்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றன, இந்தத் திட்டங்களுக்காக.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே செலவிடப்பட்ட பணத்திலே பெரும் பகுதியை, அணைகள் கட்டும் திட்டம்தான் விழுங்கிவிட்டன! அதிலே நடைபெற்றுள்ள அவலட்சணத்தைக் கேள் தம்பி! பொறுப்பும் திறனும் உள்ள ஆட்சியிலே இப்படி நடைபெறுமா என்று யோசித்துப் பார்! கோபமடையாத காங்கிரசாரைக் கேட்டு வேண்டுமானாலும் பார்! இந்த அணைத்-திட்டங்களுக்காக, கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்து வாங்கினார்களே யந்திரங்கள், அவைகளில் கிட்டத்தட்ட பாதி, சும்மா கிடக்கின்றனவாம்! கேட்டாயா, விபரீதத்தை! ஏழைமக்களின் வியர்வை; பணமாகி, இந்தக் கருவிகள் வாங்கப்பட்டன! ஆனால், வேலைக்கு உபயோகமாகவில்லை! பொய்க்கால் குதிரை! அச்சு முறிந்த வண்டி! அஸ்திவாரமற்ற கட்டிடம்! இது போலாகிவிட்டது. ஏன்? கலியாணம் செய்தும் பிரம்மச்சாரியாக இருக்கக் காரணம்? இந்தக் கருவிகள் பழுதாகிப்போனால், பொருத்தக்கூடிய சில்லரைச் சாமான்கள் கிடைக்கவில்லையாம்! எப்படி இருக்

(15-ம் பக்கம் பார்க்க)

அடுத்த இதழில்

"மக்கள் கரமும் மன்னன் சிரமும்"

மன்னன் தேவாம்சம் பெற்றவன் எனும் ஆதிக்கத் தத்துவம் அழிக்கப்பட்ட அரசியல் வரலாறு.

முடி மட்டுமல்ல, முடி இருந்த சிரமே அறுபட்ட புரட்சிக் காதை.

அண்ணாதுரை

அளிக்கும்

தொடர் கட்டுரை, துவக்கம்.

திராவிடநாடு

காஞ்சி] 29—5—55 [ஞாயிறு

பத்தில் ஒன்று!

———

பத்தில் ஒரு பங்குதான் பயன் பெற முடியுமாம்! பயன் என்று குறிப்பிடுவது, ஒவ்வொரு கிராமத்திலும், நல்ல சாலைகள், மருத்துவ விடுதிகள், ஆரம்பப் பள்ளிகள், ஓய்வுக் கூடங்கள் முதலியவைகளை உண்டாக்கித் தருவது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம், பத்தில் ஒரு கிராமம்தான் பெற முடியுமாம்! தெரிவிக்கிறார், தேஷ்முக்'

நந்தா, டில்லியின் திட்டமந்திரி— அவர் கூறுகிறார், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில், $1\frac{1}{4}$ கோடி பேருடைய வேலையில்லாக் கஷ்டத்தைத் தீர்க்கமுடியுமென நம்புவதாக.

பத்தில் ஒரு பாகம், கிராமங்கள், ஏதோ சில நன்மைகளைப் பெற முடியும். ஒண்ணேகால் கோடி பேருக்கு வேலை கிடைக்குமாறு செய்ய முடியும்.

அமைச்சர்கள், அறிவிக்கின்றனர் இப்படி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனைகளைப்பற்றி! அதற்கென ரூபாய் 6200 கோடியைச் செலவழிக்க நேரும் என்று கணக்கையும் தெரிவித்த வண்ணம்!!

கிராமங்களின் முன்னேற்றம் எவ்வளவு அவசியமானது என்பதை அழகுபட வலியுறுத்தத் தவறவில்லை, தேஷ்முக் சென்னையில்.

நந்தாவும், நாட்டிலிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டக் கொடுமையைப்பற்றி எடுத்துக் காட்டியிருக்கிறார்—சோகத்துடன், டில்லியில்.

எனினும், இருவரும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட மூலம் 'பூரணசுகம்' தரமுடியாது, பொறுத்திருக்கவேண்டியதுதான் இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகள் என்று தெரிவிக்கின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கவும், கிராமங்கள் முன்னேற்றமடையவும் இப்போது கூறப்படுவதுபோல ரூ 6200 கோடி, இன்னும் மூன்று நான்கு தடவைகள் செலவழிக்கப் படவேண்டுமாம்.

இப்போதுதேவைப்படும் ரூ 6200 கோடிரூபாய்க்கே என்னவழிசெய்வதென்று தெரியவில்லை—புதிய வரிகள் போட்டாவது பணம் சேர்க்க நேரும் என்று தெரிவித்த வண்ணமே, இந்தத் தகவல்களையும் தெரிவிக்கிறார்கள் டில்லி மந்திரிகள்.

கடந்த வாரத்தில் பம்பாய் மாகாணத்தில் சர்க்கார்—முதலாளிகள்—தொழிலாளப் பிரதிநிதிகள் அடங்கிய முக்கூட்டு மாநாடொன்று கூடிற்றும். அதுபோது, வேலையில்லாதார் தொகை பெருகுவதைப்பற்றி அவர்கள் ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறார்கள். கிராமத்தைவிட்டு வெளியேறிச் செல்லும் மக்களாலேயே, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிப்பதாக. இப்படி வெளியேறிச் செல்லும் மக்கள் தான் நகரங்களில் அலைகிறார்களாம், வேதனையோடு! இவர்களையும் தவிர்த்து, படித்துவிட்டும் வேலையில்லாது அலைவோர் தொகை வேறு இருக்கிறது. இப்படி அலைவோர்தொகையில் $1\frac{1}{4}$ கோடிபேருக்கு நிவாரணம் அளிக்கப்படும் என்று நம்பிக்கையூட்டுகிறார் நந்தா.

பத்தில் ஒருபாகம் கிராமங்களில், அடிப்படை சீர்திருத்தங்கள் செய்யப்படும்! வேலையில்லாமல் அலையும் பலகோடி மக்களில், $1\frac{1}{4}$-கோடிபேருக்கு நிவாரணம் அளிக்கப்படும்!! — இதற்கெனச் செலவழிக்கப்படப்போவதாகச் சொல்லும் தொகையோ ரூபாய் 6200-கோடி.

இந்தச் செலவை சொல்லும் அமைச்சர்களே, இந்தியாவின் பிரச்னைகளைத் தீர்ப்பதென்றால் இன்னும் இரண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போடவேண்டும் என்றும் தெரிவிக்கின்றனர்.

நாடு, கேட்கிறது — நான் என்ன பலன் பெற்றேன், முதலில் போடப்பட்ட ஐந்தாண்டுத் திட்டத்தால்! நாட்டுக்காக அணைக்கட்டுகளும் பெரிய ஆலைத் திட்டங்களும் போடப்படுகிறதெனும் பெயரால், 'சர்மா'க்களும் பெரிய அதிகாரிகளும் விரயமாக்கிய தொகை எவ்வளவோ இருக்கிறதே, இதே நிலை தானே நீடிக்கும், இனிமேலும் என்று.

நாட்டிலிருக்கும் குடிமகனும், தன்னுடைய வாழ்க்கைப் பளு அதிகமாயிருக்கிறதெனக் கூக்குரலிடுகிறானே ஒழிய, 'அப்பாடா!' என்று பெருமூச்சு விடவில்லை, ஆனால், அனுதினமும் ஐந்தாண்டுத் திட்டச் சாதனைகளைப்பற்றி, பிரமாதமாக பண்டித நேரு பேசுவதையும், அதை வைத்து ஏடுகள் எழுதுவதையும் படிக்கிறான்; திகைக்கிறான். வியப்பு அதிகமாகிறதே ஒழிய வேதனை தீரவில்லை.

இந்த அழகில், இப்போது ஐந்தாண்டுத் திட்டம்பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்ல, நாடகம், காலட்சேபம், இன்னிசை முதலிய வழிகளில் விளம்பரம் செய்யப்போகிறார்களாம், ஏழையின் விழியிலிருந்து வடியும் கண்ணீர் அடங்கினாலே போதும்—அவன் அறிந்துகொள்வான், இது நேரு சர்க்காரின் திட்டத்தால் நாம் பெற்ற பலன் என்று! அப்போது விளம்பரம் தேவையில்லை! நாட்டின் கண்ணீர் எங்கே அடங்கியிருக்கிறது? அதனால், இதுபற்றி விளம்பரம் செய்யப்போகிறார்களாம்! நல்ல சரக்குக்கு விளம்பரம் தேவையில்லை என்பார்கள் — காங்கிரஸ் சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு விளம்பரம் தேவைப்படுகிறது.

விளம்பரத்தால், நேருவின் படமும் காங்கிரசின் பெயரும் அடிபட முடியும்,—தேர்தலின்போது பயன்பட முடியுமே, தவிர, நாட்டின் கண்ணீர் அடங்காது.

நாட்டின் கண்ணீர் அடங்காத வரையில், நிரந்தர சுகமும் ஏற்பட முடியாது.

அந்தச்சுகம் கிடைக்க காங்கிரஸ் அமைச்சர்கள் குறிக்கும் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குள், நாடு என்ன கதிக்கு வருமோ, நாமறியோம்!!

★

வருந்துகிறோம்

சேலம் மாவட்ட தி. மு. க. செயலாளர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களின் தாயார் பார்வதியம்மாள் 20–5–55 இரவு 9 மணிக்கு, தனது 116வது வயதில் இயற்கை எய்தினார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அரசாண்ட ஆண்டி

மன்னன், ஒரு சமயம் நோய்வாய்ப் பட்டான்—ஆபத்தான நிலைமை—மருத்துவர்களே, கடினம் என்று கூறிவிட்டனர். மகன் மரணப் படுக்கையில், அன்னைக்கு அகமகிழ்ச்சி! மகனிடம் கொண்ட வெறுப்பாலா? அது காரணமல்ல. எவ்வளவு வெறுப்பு இருப்பினும், பாசம் விடுமா, மகனை இழக்கத் தாய் விரும்புவாளா? காரணம், வேறு. மன்னன் இறந்துவிட்டால், ரிஷ்லுவைத் தொலைத்துவிடலாம் என்ற எண்ணம், அகமகிழ்ச்சியைத் தந்தது. ரிஷ்லுவின் கொடுங்கோன்மைக்கு ஆளாகி அவதிப்பட்டவர்கள் அனைவருமே, இந்த நிலையை எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்களாம்.

மன்னன் இறந்ததும், ரிஷ்லுவை வெட்டிப் போடுவதா, நாட்டைவிட்டு விரட்டுவதா?

ரிஷ்லு தொலைந்ததும், யாரார் எந்தெந்தப் பதவி வகிப்பது?

இவைகளெல்லாம் கூடப் பேசப்பட்டனவாம்.

ரிஷ்லுவுக்கும் உள்ளூரப் பயம்தான்.

மன்னனோ அனைவரையும் ஏமாற்றிவிட்டான்—பிழைத்துக்கொண்டான். ரிஷ்லு, மகிழ்ந்தான்—சதிபேசியவர்கள் மீது பாய்ந்தான்.

மற்றோர் சமயத்தில், மன்னனுக்கும் மேரிக்கும் மிகுந்த நேசம் இருந்தது—மன்னனுக்குச் சரியான தூபமிட்டு, ரிஷ்லுவை விரட்டிவிடும்படி ஏவினார்கள் தாயார். தாயும் மகனும் பேசிக்கொண்டிருந்த தனி அறைக்குச் செல்லவும் ரிஷ்லுவுக்கு அனுமதி கிடையாது. ரிஷ்லுவுக்கு அச்சமாகிவிட்டது. எனினும், கடைசி நேரத்தில் மன்னன் ரிஷ்லுவைக் கைவிட மறுத்துவிட்டான். மேரி மனமுடைந்து, இனி நமது திட்டம் பலிக்காது என்று தெரிந்துகொண்டு, ஓய்ந்தே போனாள்.

அவ்விதமான 'பிடி' இருந்தது ரிஷ்லுவுக்கு, மன்னனிடம்.

எந்த மங்கையின் விழியும் மொழியும் மன்னனுக்கு மது ஆகிவிடுவதில்லை, என்பது ரிஷ்லுவுக்குத் தெரிந்திருந்த போதிலும், இலேசாக அச்சம் தட்டியபடி இருந்தது.

முன்னம் இரு மங்கையர் மன்னன் மனதைக் கெடுக்க முயன்ற சம்பவம், இந்த அச்சத்தை வளர்த்தது. எனவே, மன்னனைப் பெண்களுடன் பழகவிடுவது, எப்போதாவது ஆபத்தாக முடிந்துவிடக்கூடும் என்று எண்ணினான் ரிஷ்லு, ஆனால் மன்னன், தனியனாக எப்படி இருப்பான்; சோர்வு தட்டுமே! பொழுது போக்க வேண்டுமே! அதற்கென்ன செய்வது!

பதினெட்டு வயது நிரம்பிய, பார்க்க இலட்சணமாக இருந்த பகட்டு வாலிபன் ஒருவன் கிடைத்தான் ரிஷ்லுவுக்கு. பெயர், சின்க்-மார்ஸ். இந்த இளைஞனை அரண்மனை உடை அதிகாரியாக ரிஷ்லு நியமித்தான். மன்னனுடன் பழக, சின்க்மார்ஸ், அமர்த்தப்பட்டான்.

தன்னைவிட வயதில் இளைஞன், சின்க்-மார்ஸ், எனவே அவனிடம் தாராளமாகப் பேசவும், தன்எண்ணங்களைத் தைரியமாக எடுத்துச் சொல்லவும் மன்னனுக்கு முடிந்தது—அதிலே ஒரு இன்பம் கண்டான். பெண்களுடன் பழகுவது கூடக் கூச்சமாக இருக்கிறது, இவனுடன் பேசுவதும் பழகுவதும் மகிழ்ச்சி தருகிறது என்று நினைத்தான் மன்னன்.

சின்க்-மார்ஸ், ஒரு அசடன். ரிஷ்லுவிடமிருந்து மன்னனைப் பிரித்துவிட முடியும், மன்னனைத் தன் விருப்பப்படி ஆட்டிவைக்க முடியும் என்று எண்ணினான். சதி புரிவோர், அவனைப் பயன்படுத்திக் கொண்டனர். மன்னனின் தம்பி, காஸ்டனும் உடந்தை.

அதுபோது, ரிஷ்லு, ஸ்பெயின் மீது போர் தொடுத்திருந்தான்.

உடலிலேயோ புண்-சீழ் வடிந்து கொண்டிருந்தது—காய்ச்சல் குறைவில்லை—மருத்துவர் உடலிலிருந்து அடிக்கடி இரத்தத்தை வெளியிலே எடுத்த வண்ணம் இருந்தனர், நோயை குறைக்க. மரணப்பாதையிலே சென்றுகொண்டிருக்கும் நேரம் அந்த நேரத்திலும், தன் ஆதிக்கத்தைக் குலைக்க ஒரு சதி நடக்கிறது என்று தெரிந்ததும், ரிஷ்லு சீறும் புலியானான். சதியிலே தேர்ந்தவர்களெல்லாம் சாய்ந்திருக்கும்போது, அலங்காரப் பொம்மை போன்ற சின்க்-மார்ஸ் எம்மாத்திரம்? அவன் தன் திட்டம் வெற்றியாகப் போகிறது என்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான், ரிஷ்லுவோ, அவனைச் சிக்கவைக்கும் ஆதாரங்களைத் திரட்டிக் கொண்டிருந்தான்.

சின்க்-மார்ஸ், மன்னனுடன் உல்லாசமாகப் பயணம் செய்து கொண்டிருக்கிறான். ரிஷ்லுவின் ஆள், மன்னனைத் தனியே கண்டு, ரிஷ்லு தந்த கடிதத்தைக் கொடுத்தான்—மறுகணம், சின்க்-மார்ஸ் அவன் 'சகாக்களுடன்' கைது செய்யப்படுவதற்கு, மன்னன் உத்தரவு பிறப்பித்தான்.

ஸ்பெயின் நாட்டுடன் கூடிக்கொண்டு பிரான்சுக்குத் துரோகம் செய்ய, சின்க்-மார்சும் அவன் துணைவர்களும் திட்டமிட்டனர் என்பதை விளக்கும், கடிதம், ரிஷ்லுவால் மன்னனுக்கு அனுப்பப்பட்டது. சின்க்-மார்ஸ் கட்டிய மனக்கோட்டை தூள்தூளாயிற்று.

சின்க்-மார்சும் அவன் துணைவர்களும் தூக்கிலிடப்பட்டனர்.

ரிஷ்லுவுக்கு இதற்குமேல் ஆதிக்கம் செலுத்த உடல் இடம் தரவில்லை. எப்போதும் உடலைத் துளைத்துக் கொண்டிருந்த நோய், இப்போது உடலை அழுகவே செய்துவிட்டது. பிழைப்பது முடியாத காரியம் என்பது விளங்கிவிட்டது, நார்போன் எனும் நகர் சென்று, ரிஷ்லு, 'உயில்' எழுதிவைத்துவிட்டான். மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஏறக்குறைய எல்லா ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டது என்ற திருப்தி இருந்தது ரிஷ்லுவுக்கு.

நெடுநாட்களாக ரிஷ்லுவுக்கு இருந்து வந்த பயம், லூயி மன்னனுக்கு குழந்தையே பிறக்காததால், மன்னனுக்குப் பிறகு, காஸ்டன் என்னும் இளவல் மன்னனாவானே, என்பது. இந்தப் பயம், ஒழிந்துவிட்டது. நீண்டகாலமாக ஒதுக்கிவைத்திருந்த ஆன் அரசியிடம், மன்னன் எப்படியோ சமாதானமானான். 1638ல், ஒரு ஆண்மகவு பிறந்தது. அந்தச் 'சேதியை முதலில் வந்து சொன்னவருக்கு, ரிஷ்லு வைரத்தால் செய்யப்பட்ட ரோஜாமலர் ஒன்று பரிசு தந்தானாம்.

மரணப் படுக்கையிலே ரிஷ்லு—மனக்கண்முன் என்ன தெரிகிறது!

ஈடு எதிர்ப்பற்ற ஆதிக்கம் செலுத்திய காட்சிகள்.

எவர் பேச்சுக்கும் இணங்காமல், தன்னிடம் கட்டுப்பட்டுள்ள மன்னன்.

மேரி-முயன்று பார்த்துத் தோற்று, மனம் உடைந்து, அங்கும் இங்கும் அலைந்து மாண்டேபோனாள்.

காஸ்டன்-மன்னன் தம்பி, இனித் தனக்கும் அரச பதவிக்கும் சம்பந்தம் இல்லை என்பது புரிந்துவிட்டதால், பெட்டியிலிட்ட பாம்புபோலாகிவிட்டான்.

எதிர்த்தவர்கள்? கல்லறையில்! ஜோசப் பாதிரியார்? நல்ல உழைப்பாளி. அவரும் மறைந்துவிட்டார்.

லூகான் நகர பழங் கட்டிடம், அதிலிருந்து புறப்பட்ட பயணம், பாரிஸ் போற்றும் மாளிகையிலே வந்து முடிந்தது.

ரிஷ்லுவின் வாழ்க்கையைப் பொறுத்தமட்டிலே. மகத்தான வெற்றி என்றுதான் கணக்கிடவேண்டும்.

போட்ட திட்டப்படி காரியம் நடந்தேறியது — ஒரு அரசை, தன் கரத்திலே வைத்து, விருப்பப்படி விளையாட முடிந்தது.

பிரபுக்கள் கொட்டமடங்கிவிட்டது. வெளிநாடுகளிலேயும் புகழ் பேசப்படுகிறது. இவைகள் போதுமான சாதனைகள்தான் என்ற மனத்திருப்தி நிச்சயமாக ரிஷ்லுவுக்கு ஏற்பட்டிருக்கும்.

1642ம் ஆண்டு, டிசம்பர் நாலாம் நாள்' ரிஷ்லு இறந்தான். அன்று மக்கள் மகிழ்ந்து பல்வேறு இடங்களில் 'சொக்கப்பானை' கொளுத்தினராம்!

போப்பாண்டவர் இதைக் கேள்விப்பட்டதும், "ஆண்டவன் ஒருவர் இருந்தால், கார்டினல் ரிஷ்லு அவரிடம் பதில் சொல்லித் தீரவேண்டும். ஆண்டவன் இல்லை என்றால், அவன் கீர்த்தியுடன் வாழ்ந்தான் என்றுதான் பொருள்படும்" என்று கூறினாராம்.

எதையும் திட்டப்படி செய்யும் பழக்கமுள்ள ரிஷ்லு, தனக்குப் பிறகு, தன் 'செல்வத்தை' யாரார் எப்படி எப்படிப் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்பதையும், திட்டமாக எழுதிவைத்துவிட்டுத்தான் மரணத்தை நோக்கிப் பயணமானான்.

எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்பது, ரிஷ்லுவுக்கு இருந்துவந்த ஆவேசம்—அந்த ஆவேசத்தின்முன்பு, எந்தப் பண்பும் தலைகாட்டவில்லை.

தன்னைச் சுற்றிலும் பகைவர்கள் இருக்கிறார்கள், எந்த நேரத்திலும் ஆபத்து வரக்கூடும் என்று எண்ணிக் கொண்டதால், யார் எதிர்ப்புக் குரல் கிளப்பினாலும், உடனே அவர்கள்மீது முழுப் பலத்துடன் பாய்ந்து தாக்கி அழித்துவிடுவதில், காட்டு மிருகத்தின் குணத்தையும் திறத்தையும் ரிஷ்லு பெற்றிருந்தான்.

எத்தகைய சந்தர்ப்பத்தையும் நிகழ்ச்சியையும், தன் ஆதிக்க நோக்கத்துக்குப் பயன்படுத்திக்கொள்வதிலே, ரிஷ்லு காட்டிய ஆற்றல், வெகு சிலரிடமே காணமுடியும்.

ஆதிக்கம் தேடும்போது, ரிஷ்லு, இரை தேடும் புலி! மோப்பம் பிடித்தும், இரை தொலைவில் தெரிந்ததும், பாய்ந்து தாக்கியும், இரத்தத்தைக் குடிக்கும் புலிபோல், ஆதிக்கம் பெற வழி காண்பதிலும், கண்ட வழியில் பாய்ந்து செல்வதிலும், புலிபோன்றிருந்தான் ரிஷ்லு.

இரை தேடி அலையும்போது, காட்டு மிருகம், வேறு எதனையும் பொருட்படுத்தாதல்லவா—அதேகுணம் ரிஷ்லுவுக்கு இருந்தது.

ரிஷ்லு, சிறுவனாக இருந்தபோது, களைத்தும் இளைத்தும், இருமியும் நடுங்கிக்கொண்டும் இருந்தபோது, அன்புடன், அவனை வளர்த்த அருமைத் தாயார், பிணமாகி இருபத்தொரு நாட்களான பிறகே, ரிஷ்லு சவ அடக்கச் சடங்குக்குச் சென்றான். தாயார் இறந்துவிட்டார்கள், உடனே வருக!—சேதி கிடைக்கிறது — பதறவில்லை, பதைக்கவில்லை, பெற்ற தாயைக் காண ஓடவில்லை. சவ அடக்கம் செய்யவேண்டும், உடன் வருக! செல்லவில்லை!! நாலு நாட்களாகக் காத்துக் கிடக்கிறோம், தாங்கள் வந்துதான் சவ அடக்கம் நடைபெறவேண்டும். செல்லவில்லை. அவசரமான அலுவல்—இப்படி அப்படி அசையமுடியாது—தாய் இறந்தார்களா, தாங்கொணாத் துக்கம்தான், ஆனால் என் செய்வது, காரியம் இருக்கிறதே, முடிந்ததும் கடுகிச் செல்லலாம்—என்றுதான் எண்ணினான் ரிஷ்லு.

எப்படி மனம் இடங்கொடுத்தது என்றுதான் எவரும் கேட்பர். ரிஷ்லுவின் மனம் அப்படிப்பட்டது.

ஆட்சிக் குழுவிலே ரிஷ்லுவுக்குச் செயலாளர் பதவி தரப்பட்டது. அப்போதுதான் தாயார் இறந்த செய்தி வந்தது, இருபத்தோர் நாள் கழித்தே ஊர் சென்று, சவ அடக்கம் செய்தான் ரிஷ்லு.

ஊர் என்ன எண்ணும், என்ன சொல்லும் என்பது பற்றிப் பயப்படுவதில்லை.

ஊருக்கு, தன்னைப்பற்றித் தெரிவித்துக்கொள்ளும் விளம்பரப் பிரசாரத்தையும் திறம்பட நடத்திவந்தான்.

பேரவைக் கூட்டத்திலே முதன்முதல் பேசியதும், பலரும் பாராட்டினர் — ரிஷ்லு அவ்வளவுடன் திருப்தி அடையவில்லை, அந்தச் சொற்பொழிவை அச்சிட்டு, ஏராளமாக வழங்கிட ஏற்பாடு செய்தான். எதையும் அரைகுறையாகவிட்டுவைப்பது, ரிஷ்லுவின் முறையல்ல. பிரன்ச்கெஜட் எனும் பிரசார இதழைத் துவக்கி, திறமையான ஆசிரியர் மூலம் நடத்தச் செய்து, அதன்மூலம், ரிஷ்லு, தன்னைப் பற்றியும் தன் ஆட்சி முறையைப்பற்றியும் பிரசாரம் செய்துவந்தான்.

காற்று இல்லை, வெளிச்சம் இல்லை, மலர் இல்லை, மகிழ்ச்சி இல்லை, வெள்ளிச் சாமான் இல்லை, பட்டு விரிப்பு இல்லை என்று ஆயாசப்படும்நிலையில், லூகான் நகர தேவாலய அதிபராக இருந்துவந்த ரிஷ்லு "அரசுக்காக! பிரான்சுக்காக" பணியாற்றிப் பெற்ற நிலை எபபடி இருந்தது! மன்னனுக்கு, தன் உயிலின்படி 1,50,000 பவுன் வைத்திருந்தான்! இதை, மன்னர், பண நெருக்கடியின் போது உபயோகித்துக்கொள்ளவேண்டும் என்ற குறிப்புடன். மன்னனுக்குப் பணம் தந்துவிட்டுச் சாகும்நிலை இருந்தது ரிஷ்லுவுக்கு.

கார்டினல் அரண்மனை எனும் உயர்தர மாளிகை, வைரக் கற்கள் பதித்த தங்க ஆபரணம், வெள்ளிப் பேழை

கள் ஆகியவைகளை மன்னனுக்குத் 'தானம்' தர முடிந்தது, ரிஷ்லுவால்.

நெருங்கிய உறவினர்களுக்கு ஏராளமான நிலபுலமும், தோட்டம் மாளிகையும்.

ஜெமீன்களும் இனும்களும், பகிர்ந்தளித்தான்.

இலட்சக்கணக்கிலே பணம் குவிந்திருந்தது—அவைகளைத் தன் நெருங்கிய உறவினர்களுக்குப் பகிர்ந்தளித்தான்.

ரிஷலுவின் உயிலிலே குறிப்பிடப்பட்டிருக்கும் புள்ளி விவரத்தைக் கவனிக்கும்போது, பிரான்சிலே இருந்து வந்த எந்தப் பரம்பரைச் சீமானுக்கும் இல்லாத அளவு சொத்துச் சேர்ந்தது என்பது விளக்கமாகிறது.

மன்னன், ரிஷ்லுவுக்கு, கொழுத்த வருமானமுள்ள தேவாலயங்களையும், ஜெமீன்களையும் வழங்கி இருந்தான்.

கார்டினல் பதவிமூலம் கிடைத்த வருமானம் சாமான்யமானதல்ல.

நார்மண்டி பகுதியிலே ரிஷ்லுவுக்கு இருந்த பண்ணைமட்டும் ஆண்டுக்கு அரை இலட்சம் பவுன் வருமானம் அளித்தது. இதுபோல வளமான பண்ணைகள், பிரான்சிலே பல்வேறு இடங்களில் ஐந்து இருந்தன.

மேலும், அன்றைய ஆட்சி முறையின்படி, அரசாங்கக் காரியத்துக்காக வசூலிக்கப்படும் எல்லாத் தொகையிலும், ரிஷ்லு, ஒரு பகுதி சொந்தமாக்கிக்கொள்ளும் உரிமை இருந்தது. நமக்கு வேண்டாம் இது, என்று ரிஷ்லு கண்ணியம் பேசவில்லை!

புகழ் எப்படிக் குவிந்ததோ, அதைவிட வேகமாகச் செல்வம் ரிஷலுவிடம் குவிந்தது.

வீடு வாசல் தோட்டம் துரவு எனும் அசையாப் பொருள்களை நீக்கி, பணமாகமட்டும், உயிலின்படி, உறவினர்களுக்கும் ஊழியர்களுக்குமாக ரிஷ்லு தந்த தொகை ஏறக்குறைய முப்பது இலட்சம் பிரன்ச்சு பவுன் என்றால் ரிஷ்லுவிடம் குவிந்திருந்த செல்வத்தின் அளவு எவ்வளவு என்பது ஒருவாறு விளங்கும்.

ஒவ்வொரு அரசியல் குழுப்பமும் இலாபகரமான பதவியைத் தந்தவண்ணமிருந்தது, ரிஷ்லுவுக்கு.

மன்னனுக்கு மகிழ்ச்சி ஏற்படும்போதெல்லாம், ரிஷ்லுவுக்கு புதுப் பண்ணைகள் கிடைக்கும்.

பல பதவிகள் ஒரே காலத்தில்-ஒவ்வொரு பதவிக்கும் தனித் தனி வருமானம்! செல்வம் குன்றெனக் குவியத்தானே செய்யும்.

இவ்வளவு பெரும் பொருளைச் சேகரித்த ரிஷ்லு, வாழ்க்கையிலே ஆடம்பரமற்று, செலவின்றி இருந்தானே எனில், அதுவுமில்லை; மாளிகைகள் பொருமைப்படும் செலவு.

பாதுகாப்புக்காக மட்டும் ஆயுதம் தாங்கியகாவலர்கள் நூறுபேருக்குமேல்—சம்பளத்துடன்.

பல்லக்கிலே சவாரி, பரிவாரம் சூழ!

மாளிகையிலே உயர்தரமான அலங்காரப் பொருள்கள்.

குதிரைக் கொட்டில்கள் இரண்டு, அவைகளில் உயர் தரமான குதிரைகள்.

மருத்துவர்கள், உடலை அவ்வப்போது கவனிக்க வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

நாட்டின் பிரபுக்களில் ரிஷ்லுவுக்கு வேண்டியவர்களுக்கு அடிக்கடி விருந்து வைபவம் நடத்திவைக்கப்படும்—செலவு தாராளமாக.

ரிஷ்லுவுக்கு ஆடை அணிவிக்கமட்டும் ஐந்து ஆட்கள்.

குறிப்புத் தயாரிப்போர், கடிதம் எழுதித்தருவோர், ஆகியவர்கள் மூவர்—நல்ல சம்பளம்.

ஆண்டொன்றுக்கு ரிஷ்லுவின், வீட்டுச்செலவு மட்டும், இன்றைய பிரன்சு நாணய முறைப்படி 3,696,000 பிராங்குகள், என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ரிஷ்லுவைப் பேட்டி காண்பது மன்னனைக் காண்பதைவிடக் கடினம் என்று கூறத்தக்கவிதமான, ஆடம்பரம் இருந்துவந்தது.

காவலர்கள், ரிஷ்லுவைக் கண்ணிமைபோல் காத்து வந்தனர். பகலில் ரிஷ்லு, இருக்கும் அறையிலேயே ஆயுதம் தாங்கிய படைவீரர் காவலுக்கு இருப்பர். இரவில், பக்கத்தறையில் இருப்பர். துளி சத்தம் கேட்டாலும் எழுந்தோடி வரவேண்டும் என்று உத்தரவு. யாராவது ரிஷ்லுவைக் காணச்சென்றால், ஐந்து இடங்களில் படைவீரர்கள், வருபவர்களைச் சோதனையிட்டபிறகே, ரிஷ்லு உள்ள அறைக்கு அழைத்துச் செல்வர், அங்கு, படைவீரர் காவலிருப்பர்.

கோலாகலமான வாழ்க்கைதான்—ஏராளமான செலவு—ஆடம்பரம்—எல்லாம், அரசுக்காக! பிரான்சுக்காக!

கார்டினல் ரிஷ்லு, குன்றெனக் குவிந்திருந்த செல்வத்தில் மன்னனுக்கும், உறவினருக்கும், அவனிடம் கைகட்டிக் காத்துக் கிடந்த ஊழியர்களுக்கும் தந்திருக்கிறானே தவிர, ஏதேனும் பொது நலத்துறைக்கு, மக்கள் நலனுக்கு, ஒதுக்கினானா என்றால், இல்லை! மக்களுக்காகவா, ரிஷ்லு வாழ்ந்தான்! அரசுக்காக! பிரான்சுக்காக!!

உயிலிலே, ஒரு புள்ளி விவரம் அவனுடைய உள்ளக்கிடக்கையை எடுத்துக் காட்டுகிறது. 30,000 ஒரு சீமானுக்குத் தரும்படி, குறிப்பு இருக்கிறது-"அவருக்கும் பணமுடை என்பது எனக்குத்தெரியும், ஆகவே அவருக்கு இந்த உதவித் தொகையைத் தருக," என்று கூறப்பட்டிருக்கிறது. கனிவு, எந்தத்திக்குக்கு என்பது விளங்குகிறது.

அரசுக்காக! பிரான்சுக்காக! என்ற சொற்களைத் திறம்படப் பயன்படுத்தி, கொடுமைகளைக் கூசாமல் செய்து, ஆதிக்க வெறியனாய் வாழ்ந்து, பெரும் செல்வத்தைச் சேகரித்துக்கொண்ட ரிஷ்லுவின், வாழ்க்கை முறையை, ஆதிக்கத்தைத் தேடி அலைபவர்கள், திருவாசகமென்று இன்றும் எண்ணுகின்றனர்.

ஓயாத உழைப்பு, கூர்மையான புத்தி, அளவற்ற ஆற்றல், எந்தத் துறையிலும் இணையற்ற சமர்த்து என்று பாராட்டுகின்றனர்,

உலகம், போட்டிப் பந்தய மேடை அல்ல—கூட்டுறவுச் சாலை, என்ற புனிதக் கோட்பாட்டை மதியாதார், இரும்புக் கரத்தினரை, ஈவு இரக்கமற்ற நெஞ்சினரை, அவர்களின் வெற்றிகண்டு, பாராட்டுவது, வாடிக்கையாகி விட்டது.

மனிதனைச் சிங்கம் பிய்த்து எறிந்ததை, திராட்சைக் கொத்தைத் தின்றபடிஇரட்சித்திடவில்லையா, ரோம்நாட்டு மமதையாளர்கள். பொது நோக்கு, பொது நலம், மக்கள் முன்னேற்றம் எனும் எதற்கும் பற்றுக்கொள்ளாது, சிறக்க வாழவேண்டும், ஈடு எதிர்ப்பின்றி ஆட்சி செலுத்த வேண்டும், என்று முயன்று, வெற்றிபெறுபவர்களைப் பாராட்டுவது, அது போன்றதேயாகும். மதத்துறைத் தலைவர்கள் உண்டு, அரசியல் துறைத்தலைவர்கள் இருக்கிறார்கள்—கார்டினல் ரிஷ்லு, மதத் துறையில் தலைமை பெறப் பணியாற்றியபடி இருந்துகொண்டே, அரசியல் துறையில் ஆதிக்கம் பெற்ற, ஒரு அபூர்வமான சர்வாதிகாரி.

பாரிலிமெண்டுகளைப் பஜனை மடங்களாக்குவோர் உண்டு, பஜனைமடங்களில் பார்லிமெண்டு நடத்துவோர் உண்டு, இந்த ரிஷ்லு, பஜனைமடத்தில் இருந்தபடியே பார்லிமெண்டுக்குத் தன்னைத் தயாரித்துக்கொண்டிருக்கும் தனி வழி கண்டறிந்து பயன் கண்டவன்.

மதத்துறையில் ஈடுபட்டு, அதிலே மாசுகளைக் களைந்தெறிந்து, மாண்புகளைப் பெருகச்செய்து, அத்தகைய மார்க்கத்தின் மூலம் மக்கட் சமுதாயத்துக்கு உயர்வும உய்யும் வழியும் கிடைத்திடச் செய்வதற்காகப் பணியாற்றிடும் பெரு நோக்குடையார் பலர் உண்டு—பலர் பணியாற்றிப் பலன் காணாது பதறினர்.

சிலர், மதத்துறையிலே பெருமளவுக்குச் செல்வாக்குத் தேடிக்கொண்டு, அந்தச் செல்வாக்கைக் காட்டி அரசுகளைப் பணியவைக்கவும், ஆட்டிப் படைக்கவும், முயன்றனர்—வெற்றியும் கண்டனர்.

சில அரசியல் தலைவர்கள், அந்தத் துறையிலே தமக்குக் கிடைத்த செல்வாக்கைக்கொண்டு மதத்துறையிலேயும் தமது ஆதிக்கம் நுழையும்படிசெய்து வெற்றி பெற்றனர்.

கார்டினல் ரிஷ்லு, இதுபோன்ற வகையினரில் ஒருவராகவில்லை—அவன் கண்ட வழியே தனி!!

ஆதிக்கம் பெறுவதற்கு, மதத்துறையைச் சிலர்போல் ஏணியாக்கிக்கொள்ளவில்லை—அரசியல் ஆதிக்கம் பெறுமுன், மதத்துறையைச் சிறிது காலம் தங்குமிடமாகக் கொண்டான். மதத்துறையில் பெரும் செல்வாக்குப் பெற்றதால் அரசியல் துறையில் ஆதிக்கம் பெறலாம் என்பது பொதுவிதியானால், போப்பாண்டவரல்லவா, பிரான்சு நாட்டை ஆட்டிப்படைத்திருக்க வேண்டும். கார்டினல் ரிஷலுவின் கைப்பிடியிலல்லவா, பிரான்சு சிக்கிற்று! போப்பிடமல்லவே!!

அம்மட்டோ! அந்தப் போப்பாண்டவரைக் கூட, ஒரு சம்பவத்தின்போது, இந்த ரிஷலு, 'உமது வேலையைப் பாரும்! என் துறையிலே தலையிடவேண்டாம்' என்று கூறிட முடிந்தது!!

அரசுக்காக! பிரான்சுக்காக! என்ற சொற்றொடர்—ரிஷ்லு காலத்தில். இன்று ரிஷ்லுக்களாகலாமா என்று மனப்பால் குடிக்கும் சிலரும் அடிக்கடி அரசுக்காக! நாட்டுக்காக! என்று பேசி, மக்களை மயக்கவும், உலகை ஏய்க்கவும், எதிர்ப்பை ஒடுக்கவும் முடியும் என்று நம்புகிறார்கள்.

நாட்டுக்காக! என்று கூறிக்கொண்டே, எந்த அக்ரமம் செய்தாலும் மக்கள் சகித்துக் கொள்வார்கள், என்று எண்ணுவது ஏமாளித்தனம். ரிஷ்லுவால் முடிந்ததே! என்று கூறலாம்—மக்கள் பழிதீர்த்துக்கொண்டனர், காலம் பிடித்தது அதற்கு, எனினும் பழிதீர்த்துக் கொண்டனர்—ரிஷ்லுமீதல்ல, அவன் போற்றிவந்த, அரசின் மீது!!

அரசு பலமடைய வேண்டும் என்று பேசப்படும்போது ஆமாம் என்ற பதில் எளிதாகக் கிடைத்துவிடும்...ஆனால், எப்படிப் பலமடைவது என்ற கேள்வியும், எதற்காகப் பலமடைய வேண்டும் என்ற கேள்வியும், மக்கள் கேட்க ஆரம்பித்தால், ஆதிக்கவாதிகள் பதில் இறுக்க இயலாது.

அரசு, மக்களுக்கு நலம்தர ஒரு ஏற்பாடு, என்ற இலட்சியத்தை மறந்து, நாடு மக்களின் உடமை என்ற உண்மையை ஏற்காது, நாடு என்றால், அதிலே காணப்படும் விரல்விட்டு எண்ணத்தக்க பட்டுடை அணிந்த வீணர்கள் மட்டுமே என்று கருதி, அரசு என்றால், அவர்களின் வசதி கெடாதபடி மற்றவர்களைக் கண்காணித்து வருவதுதான் என்று தீர்மானித்து, ஆதிக்கம் புரிந்தவர்களால், அரசும் மேன்மையுறாது, நாடும் வளம் பெறாது.

ரிஷ்லுவுக்குத் தெரிந்த பிரான்சு, அங்கே செக்குமாடென உழைத்துக்கிடந்த பெரும்பான்மை மக்களல்ல. மமதையால் மன்னனை எதிர்க்கக் கிளம்பும் சில பிரபுக்களும், வேற்று மார்க்கத்தவர் என்பதால் பிணங்கிக் கிடந்த சில பலரும், கீர்த்தி எனும் வெற்றுரைக்காக போர் மூட்டிவிடும் வெறியர் சிலரும்தான், ரிஷ்லுவுக்குத் தெரிந்தனர்.

அரண்மனை, மாளிகை, ஆலயம், இவற்றோடு நாடு முடிந்துவிடவில்லை, வயல் இருக்கிறது, வாய்க்கால் இருக்கிறது, பாதை இருக்கிறது பள்ளம் இருக்கிறது, தொழில் இருக்கிறது துயரம் இருக்கிறது, இங்கு, இலட்ச இலட்சமாக ஏழைகள் உள்ளனர், உழைத்த வண்ணம், உழைக்கிறார்கள் வாழ முடியவில்லை, சாவை வரவேற்கிறார்கள், நிம்மதிபெற, அதனினும்சிறந்த மார்க்கம் வேறு இல்லாததால்! இந்தப்பிரான்சுக்குஅல்ல, ரிஷ்லு, முதலமைச்சரானது! அவனுடைய பிரான்சு, மன்னன், அவனைச் சுற்றி வட்டமிடும் வல்லூறுகள், அவனுக்கு விளையாட்டுக்காகப் பறந்திடும் பொன்வண்டுகள், இவைகள் உள்ள, அரண்மனை, மாளிகை, பூம்பொழில் இந்த ஏற்பாட்டைப் பாதுகாக்க அமைந்துள்ள பாசறை, நீதிமன்றம், சிறைக்கூடம் இவை!

பிரான்சு, பெருமூச்சுவிட்டது, ரிஷலுவின் செவியிலே விழவில்லை—கேட்க மறுத்துவிட்டான்.

பிரான்சிலே, ஐந்தில் ஒரு பகுதி நிலம்—வயல்—மன்னனுக்குச் சொந்த உடைமை.

மற்றோர் பங்கு மத அலுவலருக்கு, பிறிதோர் பங்கு பிரபுக்களுக்கு, மிச்சம் இருந்ததை பொது மக்களுக்கு என்று விட்டுவைத்தனர். பொதுவளம், பொதுநலம், பொது அறம், எதுதான் தழைக்கமுடியும்!

இந்த ஏற்பாடு, சரியா, தவறு என்று ஆராய்வது கூடத் தேவையில்லை, என்று இருந்துகொண்டுதான் ரிஷலு, அரசுக்காக! நாட்டுக்காக! என்று பல்லவிபாடி ஆதிக்கம் செலுத்தினான்.

பிரபுக்களின் கொட்டத்தை அடக்கும்போதுகூட, அவர்கள், மக்களை மாடுகளாக்கி, வாழ்கிறார்கள் என்பதற்காக அல்ல! ரிஷலுவே பெரிய பெரிய பண்ணைகளுக்கு உரிமையாளராகிவிட்டானே! ஏழை உழவனின் வியர்வையும் கண்ணீரும் கலப்பதுபற்றிக் கவலை ஏன் பிறக்கும்!

உழவன், பிரபுவிடம் அடிமைப்பட்டுக்கிடந்தான். கூப்பிட்டபோது ஓடி வேலைசெய்யவேண்டும். கேட்ட வரியைத் தந்தாகவேண்டும். வரி, மட்டுமா? எதையும்!

பிரபுவின் இயந்திரத்தில்தான் அவன்மா அரைத்துக் கொள்ளவேண்டும்.

அவருடைய பறவைகள் உழவன் வயலிலே புகுந்து கதிர்களைக் கொத்தும், அவன் அவைகளை விரட்டக் கூடாது,

அவர் அமைத்த நீதி மன்றத்தில் உழவன், கைகட்டி நிற்கவேண்டும், அவர் சொல்வதுதான் சட்டம்!

உழவன், விளைந்ததை விற்றுத் தேவையானதைப் பெற்று வரலாம் என்று கிராமத்தை விட்டுக் கிளம்பி சந்தை கூடும் இடம் போவான், வழியிலே, சீமான்களின் சுங்கச் சாவடி இருக்கும், வரிகட்டினால்தான், போக அனுமதி.

இவ்வளவும் இவைகளின் விளைவாகவும் கொடுமைகள் மலிந்துகிடந்தன. அறிவாற்றல் படைத்த, எடுத்த செயலை முடித்தே தீருவதிலே வல்லமை பெற்ற ரிஷலு, என்ன செய்தான்? சிறு விரலையும் அசைக்கவில்லை.

மத அலுவலர்களின் போக்கோ—பிரபுக்கள் பயிற்சி பெறவேண்டிய கல்லூரியாக இருந்தது.

பட்டிக்காட்டு உழவன் விளைவதில் பத்திலோர் பாகத்தை 'காணிக்கை'யாகத் தந்துவிடவேண்டும்—இந்தக் காணிகை பல கிராமங்களிலே சேகரம் செய்யப்பட்டு, ஒரு தேவாலய அதிபருக்கு போய்ச் சேரும். மதச்சடங்குகளின் போதெல்லாம், 'வரி' கட்டவேண்டும். முணுமுணுக்கக் கூடாது, கணக்குப்பார்த்தலாகாது, புண்யம் கிட்டாது. தேவாலயம், அருளாலயம், என்பன போன்ற திருப்பெயர்களைத் தாங்கிக்கொண்டிருந்த மத அமைப்புக்கு, தானமாகக் கிடைத்த நிலங்களிலிருந்துமட்டும் 100,000,000 பிரன்ச்சு பவுன் வருமானம் கிடைத்து வந்தது.

இந்தப் பெருந்தொகை, அஞ்ஞானத்தை விரட்ட, சன்மார்க்கத்தை நிலைநாட்ட, பயன்பட்டதா? கேட்பதே, பாபம்.

சீமான்களுக்கு, ஜெமீன்கள் பண்ணைகள் இருப்பது போல,இந்தஅருளாலயங்களுக்கும்உண்டு. வருமானத்தை அவர்கள் களியாட்டத்திலே செலவிடுவர், அவர்களிடம் சிறுதொகை ஊதியம் பெற்றுக்கொண்டு, பூஜாரி, கர்த்தரின் பெருமையைக் கழனி ஆண்டிக்கு எடுத்துக் கூறி வருவான்.

புரட்சியின் போது தொகுக்கப்பட்ட புள்ளிவிவரத்தின்படி, மத அமைப்புகளின் மொத்த ஆண்டு வருமானம் 170,000,000 என்று கணக்கிட்டனர்!

வரி தரமாட்டார்கள் மத அலுவலர்கள்! "எமது வாயைத் திறப்போமே தவிர கையைத் திறக்கமாட்டோம்" என்று ஒரு மத அலுவலர் கூறினர், ஒரு சமயத்தில். இன்னொருவர், "மக்கள் பொருள் தருகிறார்கள், பிரபுக்கள் வீரத்தைத் தருவர், நாங்கள் ஜெபம் தருகிறோம்" என்று கூறினராம்.

பண நெருக்கடியின்போது ஒரு முறை, ரிஷலு முயன்று பார்த்தார், மத அலுவலர்களிடமிருந்து வரி வசூலிக்கபிடிவாதமாகமறுத்துவிட்டனர்எதிர்ப்புவலுத்தது இந்த ஆபத்தான வேலை வேண்டாமென்றோ, என்னவோ இனம் இனத்தைக் காக்கும் போக்கிலே ரிஷலு, மேலால் வலியுறுத்தவில்லை. அவர்களாகத் தந்த 'தொகை'யை நன்றிகூறிப் பெற்றுக்கொள்வதுடன், அந்த அத்யாயத்தை முடித்துக்கொண்டான்.

ஐந்தாண்டுக்கு ஒரு முறை மத அலுவலர்கள், தாமாக, மனமுவந்து ஏதேனும் 'தொகை' தருவர், அரசர் அந்தத் தேவப் பிரசாதத்தை மதிப்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பிரபுக்களுக்குத் தனித்தனி தர்பார் இருந்தது—எனவே அவர்களும் அரசுக்கு வரிசெலுத்த மாட்டார்கள்.

ஆக, அரசுக்கு வரி செலுத்தும் பெரும்பாரம், ஏழையின் முதுகிலே விழுந்தது.

அரசுக்காக! நாட்டுக்காக! என்று பாடிய ரிஷலுவுக்கு இந்த நிலைமைகளைத் திருத்தவேண்டும் என்றும் தோன்றவில்லை. அறிவும் ஆற்றலும், அரசனுக்குப் பொழுது போக்குத் தேடித்தர உதவிற்று, ஏழை அழுத கண்ணீரைத் துடைக்க அல்ல.

நீதிமன்றங்கள், பிரான்சில் பலரகம்!

அரச நீதி மன்றங்கள், பிரபுக்களின் நீதிமன்றங்கள், மத நீதிமன்றங்கள் என மூன்று வகை—இதற்குள் உட்பிரிவு வகைகள்ஏராளம். ஒவ்வொன்றுக்கும்ஒவ்வொரு விதச்சட்டம்-எப்போது எந்தச் சட்டம் பயன்படுத்தப்படும் என்பது ஏழைக்கு விளங்கவே முடியாத புதிராக இருந்தது. இந்தப் புதிர், எண்ணற்ற வழக்கறிஞர்களுக்கு கொழுத்த வேட்டை தந்து வந்தது. 360 வகையான சட்ட முறைகள் இருந்ததாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

இவைகளில் எதனையும் மாற்ற, திருத்த, மக்களுக்கு உகந்ததாக்க ரிஷலு முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை.

அரசர், வரிவசூலிக்க பிரான்சு முழுவதுக்கும், மொத்தமாக அறுபது பேரை நியமிப்பார். அவர்கள் ஆறு ஆண்டுகள் அதிகாரம் புரிவர். மன்னனுக்கு முன்னதாகக் குறிப்பிட்ட தொகையைக் கட்டிவிடுவர். இப்படி வரி வசூலிக்கும் உரிமை ஏலத்தில் விடப்பட்டது; அகப்பட்ட வரையில் இலாபம் என்று அவர்கள் ஏழைகளைக் கசக்கிப் பிழிந்தனர். ரிஷலுவின் ஒளிவிடும் கண்களில் இந்த அக்ரமம் படவில்லை!

விருந்தொன்றின்போது, ஒவ்வொருவரும், பொழுதுபோக்குக்காக, கொள்ளை அடிப்பவர்களைப் பற்றி விதவிதமான கதைகள் கூறினர்களாம். அந்த விருந்திலே வால்டேர் இருந்தாராம். அவரையும் ஒரு கொள்ளைக்காரன் கதை கூறச்சொல்லி வற்புறுத்தினர்களாம், அவர், "ஒரே ஒரு காலத்தில் ஏகவரி ஏலஅதிகாரி ஒருவன், இருந்தான். அவ்வளவுதான்!" என்று கதையை முடித்துவிட்டாராம். கொள்ளை அடிப்பவர்கள் எல்லாரையும் மிஞ்சக்கூடிய கொள்ளைக்காரன், இந்த வரி ஏல அதிகாரி, என்பதைச் சுவைபட வால்டேர் சொன்னர். ரிஷலு இது அக்ரம முறை என்று உணரவில்லை.

எந்தத் துறையைக் கவனித்தாலும், அநீதி தாண்டவமாடிற்று, அக்ரமம் தலைவிரித்தாடிற்று, எதையும் திருத்த ரிஷலு முயலவில்லை. அரசுக்காக! பிரான்சுக்காக! என்று மட்டும் பேசினன், இவ்விதமான அநீதிகளை வைத்துக்கொண்டு, எந்த அரசுதான் நிலைக்க முடியும், எந்த நாடு பிழைக்க இயலும்!

எனவேதான், புரட்சி கிளம்பிற்று—பிரான்சு, புடம் போட்ட தங்கமாவதற்கு! மக்களுக்காக அரசு! மக்களுக்காக பிரான்சு! என்ற முழக்கமிட்டனர், புரட்சி வீரர்கள்.

அறியாமல் செய்த ஒரு நன்மை உண்டு, ரிஷலுவால்!

கோட்டை கொத்தளங்களை அமைத்துக்கொண்டு, கொடிகட்டி ஆண்ட பிரபுக்களின் கொட்டத்தை அடக்கி, அவர்களுடையஇராணுவபலத்தைஒடுக்கிவிட்டான்ரிஷலு. இது, மக்கள் பிரான்சிலே மாபெரும் புரட்சிசெய்தபோது, அவர்களை எதிர்க்கும் சக்தியை, பிரபுக்கள் பெறமுடியாதபடி செய்தது.

எல்லா அதிகாரங்களையும் அரசனிடம் குவித்து வைத்ததும், புரட்சிக்கு மறைமுகமாக உதவி செய்தது.

மன்னனுடைய மணிமுடி ஒளிவிடவேண்டுமென்று' ஏழையின் இரத்தத்தை அபிஷேகம் செய்வித்து அரசாட்சி புரிந்தான் ரிஷலு, மக்கள் பதிலளிக்க நெடுங்காலம் பிடித்தது, அவர்கள் தந்த பதிலோ, பயங்கரமானது, மன்னனின் தலையைவெட்டிக் காட்டி, முழக்கமிட்டனர், மக்களுக்காக! பிரான்சுக்காக!! என்று.

அரசியற் கருத்துக்கள்

[அன்று முதல் இன்று வரை]

[பேராசிரியர் இருதயராஜ்]

ஜான் ஸ்டுவர்ட்மில் 1806-73

'சமூக நலனுக்காகவே அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. மக்களின் சம்மதம் அவர்களுடைய ஒத்துழைப்பு இவைகளின் மேலேயே கட்டப்பட்டது அரசாங்கம். மக்களுடைய அறிவைப் பெருக்கி அவர்களை நல்ல வழியில் நடக்கச் செய்து அதன் மூலம் சமூக நலனை அபிவிருத்தி செய்யவே அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது' என்று மில் தன் கருத்தை வெளியிட்டார்.

தனி மனிதனின் சுதந்தரத்தை வெகுவாகப் போற்றினார் மில். தனி மனிதனின் நடவடிக்கைளில் எவ்வளவுக்குக் குறைவாக அரசாங்கம் தலையிடுகிறதோ அவ்வளவுக்கு நல்லது. மக்கள் மனச்சாந்தி அடையவேண்டும். அதை அடையாவிட்டால் அவர்கள் எவ்வளவு நன்மையடைந்தாலும் பயனில்லை. மனதில் எண்ணியதைப் பயமின்றி எடுத்துச் சொல்லும் பேச்சுச் சுதந்தரம் இருந்தால்தான் மனச்சாந்தி ஏற்படும். தான் எண்ணியதைச் செய்வது, தான் விரும்பிய விதத்தில் அதைச் செயவது இதில்தான் சமூக நலன் அடங்கியிருக்கிறது என்றார். ஒவ்வொருவனும் தனக்கு உரிய தனிப்பாதையில் செல்லுவதே சமூகத்திற்கு நல்லது என்று சொல்லும்போது அரசின் அதிகாரத்தையும், மற்றவர்களுடைய சுதந்தரத்தையும், மற்றவர்களைப் பொறுத்தமட்டில் தனக்கிருக்கும் கடமைகளையும் பொறுப்பையும் மறந்துவிடலாம் என்பதல்ல பொருள், இவைகளால் கட்டுப்பட்டதே தனி மனிதனின் சுதந்தரம்.

எந்த அரசாங்கத்தில், முடிவான அதிகாரம் மக்கள் எல்லோருடைய கையிலும் இருக்கின்றதோ, ஒவ்வொருவனுக்கும் அந்த முடிவான அதிகாரத்தில் பங்கு இருக்கின்றதோ, அதாவது ஏதாவதொரு அரசாங்க அலுவலை நிர்வகிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறதோ, அதையே சிறந்த அரசாங்கமாக மில் கருதினார். ஆனால் சிறிய நகர அரசுகளில் மட்டுந்தான் மக்கள் எல்லோரும் நேரடியாகப் பொறுப்பேற்று அதிகாரத்தில் பங்கு பெற முடியுமாதலால், பிரதிநிதித்துவ அரசாங்கமே இருப்பவைகளுக்குள், முடிந்தவரையிலும் மேலானது என்று ஒத்துக் கொண்டார்.

ஆஸ்டினைப் போலவே ஒவ்வொரு அரசிலும் முடிவான சர்வ அதிகாரம் அவசியம், எங்கோ எவரிடமோ இருக்கவேண்டுமென்பதை ஆதரித்து இங்கிலாந்தில் அது பார்லிமென்ட் என்ற மக்கட் சபையில் இருப்பதாகக் கூறினார்.

மக்களாட்சியில் மக்கள் பயமின்றி வாழலாம் என்ற நம்பிக்கை தவறானது. மக்களாட்சி என்ற திரையில் கொடுங்கோலாட்சி நடைபெற வழியுண்டு. அது, கொடுங்கோல் மன்னராட்சி, பிரபுக்களாட்சி இவைகளைவிட மோசமானதாகவும் இருக்கலாம். எங்கே மக்களெல்லாம் அசமந்தமாக இருந்து, அவர்களில் பலர் தற்குறிகளாக, அரசாங்க நடவடிக்கைகளில் அக்கறை கொள்ளாதவர்களாக இருக்கிறார்களோ, அல்லது ஆட்சியைக் கைப்பற்றி நடத்தி வருபவர்களில் திறமையற்றவர்களும், சுய நலமிகளும் காணப்படுகிறார்களோ அங்கு ஆட்சி பயனுள்ளதாக இருக்காது. பொது நலனுக்குப் புறம்பான கொள்கைகளையுடையவர்களின் கையில் சிக்கிய ஆட்சி குடியரசாயினும் மக்களைச் சீரழிக்கும். வெறும் எண்ணிக்கையில் பெரும்பான்மையானவர்களுடைய ஆதிக்க வெறிக்கு அடிகோலுகிறது பிரதிநிதித்துவ மக்களாட்சி. அறிவிற் சிறந்தவர்கள், மேதைகளுக்கு ஆட்சியில் இடம் கிடைப்பதில்லை. மிகச் சாதாரணமானவர்கள் திறமையில்லாதவர்கள் சுலபத்தில் ஆட்சியில் இடந்தேடிப்பிடித்துக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது என்ற எச்சரிக்கை விடுத்தார், மில்.

சிறுபான்மையோரை நசுக்கி அவர்களுக்குக் கெடுதல் புரிய பெரும்பான்மையினருக்கு சந்தர்ப்பம் இருக்கிறது. சில சமயங்களில் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெருத ஒரு கட்சி ஆட்சிப் பீடத்தில் அமரலாம். அந்தக் கட்சி எப்படி நாட்டின் பெரும்பான்மையினரின் எண்ணங்களைப் பிரதிபலிப்பதாகக் கொள்ளமுடியும்? இவ்விதம் கெடுதல்களைத் தவிர்ப்பதற்கு தாமஸ்ஹேர் என்பவர் தோற்றுவித்த ஒரு புது முறை மிகச் சிறந்தது என்று மில் கருதினார். அதன்படி மக்களைச்சிறு சிறு தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பிரதிநிதி என்று அனுப்புவதைவிட, மக்கள் எல்லோரையும் ஒரு தொகுதியாகக் கருதி தேர்தல் நடத்தவேண்டும். எந்த அபேட்சகரும் எங்கு வேண்டுமானாலும் வாக்குகளைப் பெறலாம். சட்டசபைக்குள்ள ஸ்தாபனங்களைக் கொண்டு வாக்காளரின் மொத்தத் தொகையை வகுத்து அதனுடைய ஈவு எண்ணுக்குமேல் யார், யார் வாக்குகளைப் பெறுகிறார்களோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று கருதவேண்டும்.

ஒரு சட்டசபைக்கு 100-ஸ்தானங்களும், மொத்த வாக்காளர் 100,000 என்றும் வைத்துக்கொண்டால் ஆயிரத்திற்கதிகமான வாக்குகளைப் பெற்றவர்களெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவார்கள்.

இந்த முறைப்படி எந்தக் கட்சியினரும் நாட்டின் எந்தப் பகுதியிலும் வாக்குகள் பெறலாம். ஒரு ஊரிலிருப்பவர் மற்ற ஊர்களில் தன்னைச் சேர்ந்தவர்களுடைய வாக்குகளைப் பெறலாம். ஒவ்வொரு பகுதியிலும் தனியாகப் பார்க்கும்போது சிறு பான்மையாராக இருப்பவர்கள் எல்லாம ஒன்று சேர்ந்து தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஒற்றுமையாக இருந்து வாக்களித்து வெற்றி பெறச் செய்யலாம். அப்படியின்றித் தனித்தனிப் பகுதிகளில் மட்டும் இவர்களுடைய வாக்குகள் செல்லுபடியாவதாயிருந்தால் இவர்களுடைய தனிப் பிரதிநிதிகளாக எந்தப் பகுதியிலும் இவர்களுடைய வாக்குகளை மட்டும் பெற்று ஒருவரும் வெற்றி பெற முடியாது.

விகிதாசாரப்படி பிரதிநிதித்துவம் என்ற வேறொரு முறையைத் தாமஸ்ஹேர் கண்டு பிடித்தார். அதுவும் மில்லினுடைய நன்மதிப்

பைப் பெற்றது. இந்த முறைப்படி ஒரு தொகுதியில் பத்துப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அங்கு இலட்சம் வாக்காளர் இருக்கின்றனர் என்றால் ஒவ்வொருபிரதிநிதியும் குறைந்தது 10,000 வாக்குகளைப் பெற்றால் தான் வெற்றியடையலாம்.

வாக்குகள் பதிவு செய்யும் காகிதத்தில் தேர்தலுக்கு நிற்கும் 30 அல்லது 40 அபேட்சகர்களுடைய பெயர்களும் காணப்படும். ஒவ்வொரு வாக்காளர்களும் தாங்கள் யாரை மிகவும் விரும்புகிறார்களோ, அந்த அபேட்சகருடைய பெயருக்கு எதிராக 1 என்றும், அதற்கடுத்தபடியாக யாரை விரும்புகிறார்களோ அவருக்கு 2 என்றும் இப்படியே படிப்படியாக 10 வரை குறிப்பார்கள். எந்த அபேட்சகருக்கு முதல் வாக்குகளாக 10,000க்கு மேல் கிடைக்கின்றனவோ அவர்கள் வெற்றி பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள்,

ஒரு அபேட்சகருக்கு 15000 வாக்குகள் கிடைத்தால், அவர் வெற்றி பெற்றவராவார். அவருக்கு அவசியமில்லாத 5000 வாக்குகள் வீணாகப் போவதில்லை. அந்த 5000 வாக்குச் சீட்டுகளில் வாக்காளர்கள் தங்களுடைய அடுத்தபடி விரும்பும் ஆளாக யாருக்கு 2-வது வாக்கைக் கொடுத்திருக்கிறார்களோ, அவருக்கும், அப்படியே வரிசைக் கிரமமாக மற்ற எட்டு அபேட்சகர்களுக்கும் விகிதாச்சார முறையில் வெற்றி பெற்றவருக்குத் தேவைப்படாத வாக்குகள் பிரித்துக்கொடுக்கப்படுகின்றன.

இந்த முறையில வாக்குகள் வீணாவதில்லை. பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்களுக்குத் தேவைக்கதிகமாகக் கிடைக்கும் வாக்குகள் சிறுபான்மைக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்க ஏதுவாகிறது.

இந்த விகிதாசார முறை குறைந்த அளவில் எண்ணிக்கையுள்ள வாக்காளர்களைக் கொண்ட தேர்தல்களில் மட்டும் கையாளப்படுவதில் நன்மையுண்டு, அதிகப்படியான வாக்காளர்கள் இருக்குமிடத்தில் இதனால் அதிக சிரமம் ஏற்படும். மிகவும் தெளிந்த அறிவுள்ள வாக்காளர்கள் இருக்கும் இடங்களில்தான் இந்த முறையின் நுணுக்கம் கண்டுபிடிக்கப்பட்டுப் பயன்தரும் முறையில் பிரயோகிக்கப்படும். சாதாரண மக்களுக்கு இந்த முறையைப் புரிந்துகொள்ளுவதே சிரம்மாயிருக்கும். மேலும் ஒரே பிரதிநிதியை மட்டும் தேர்ந்தெடுக்கும் தொகுதிகளில் இம்முறை உதவாது.

எப்படியும் பெரும்பான்மையினரின் பேராசை, ஆதிக்கவெறி, கொடுங்கோன்மை, இவைகளிலிருந்து சிறுபான்மைக் கட்சியினராயினும் சரி, சிறுபான்மை இனத்தையோ மதத்தையோ சேர்ந்தவராயினும் சரி, அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணத்தினாலேயே ஹேர் முறையை மில் ஆதரித்தார்.

சட்டசபைக்குப் பிரதிநிதிகளாகச் செல்பவர்கள் கல்வி அறிவும் அனுபவமும் நிறைந்தவர்களாக இருக்க வேண்டுமென விரும்பினார் மில். ஓரளவுக்கு எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கே வாக்குரிமை அளிக்கப்படவேண்டும். உயர்தரக் கல்வி பயின்றவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குகள் கொடுத்து அதிக அறிவுக்குத் தக்கபடி அரசியல் விவகாரங்களில் அதிக பொறுப்பும் முக்கியத்துவமும் ஏற்படுத்தவேண்டும் என்றார். இரகசிய வாக்குப்பதிவு முறையைக் கண்டித்து, வாக்களிப்பது ஒரு உரிமையைப் பிரயோகிப்பது மட்டுமல்ல, ஒரு பிரஜை தன்னுடைய பொறுப்புள்ள கடமையை நிறைவேற்றும் செயல். அதில் இரகசியத்துக்கோ மறைவான செயலுக்கோ இடமில்லை என்றும் சட்டசபை அங்கத்தினர்களுக்குச் சம்பளம் கொடுப்பது தவறு—அவசியமில்லாதது என்றும் கூறினார்.

மக்களுடைய பொருளாதாரத் தொழில் முயற்சிகளில் அரசாங்கம் தலையிடுவதைத் தடைசெய்ய வேண்டும் என்றார். தொழிற்துறையில் கட்டுப்பாடில்லாத போட்டி முறைக்குப் பதிலாக கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்வதே சிறந்தது என்றும் நம்பினார்.

பெந்தாம், ஆஸ்டினைப்போல், மக்கள் பயன் கருதி பழக்கத்தின் காரணமாக அரசுக்குக் கீழ்ப்படிகிறார்கள் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டாலும், மில் அத்துடன் நில்லாது தனி மனிதனின் சுதந்தரத்தைப் போற்றிப் புதிய விளக்கம் தந்தது, ஜெர்மன் இலட்சியவாதிகளான ஹெகல் போன்றவர்கள் அரசை வரம்பில்லாத அதிகாரமுள்ள ஒரு ஸ்தாபனமாகக் கருதி வெளியிட்ட கொள்கை இங்கிலாந்தில் பரவவொட்டாமல் தடுக்கக் காரணமாயிருந்தது.

பலகாலமாக அரசின் அதிகாரத்தையும் அரசாங்கத்தின் வல்லமையையுமே அரசியல் அறிஞர்கள் ஆதரித்து வந்திருக்கும்போது தனி மனிதனின் சுதந்தரத்தையும் அவனது உரிமைகளையும் அரசில் அவனுக்கிருக்கும் உயர்ந்த இடத்தையும் எடுத்துக் காட்டினது, மில் மக்களுக்குச் செய்த சிறந்த சேவையாகவே கருதப்படவேண்டும். (தொடரும்)

யோகம் அடிக்கிறது!

எஃகு விலையை உயர்த்தியிருக்கிறது, டில்லி சர்க்கார்.

டன் ஒன்றுக்கு 54-ரூபாய்கள் அதிகம் தரவேண்டுமாம்!

ஏன்? இந்த விலையுயர்வு தெரியுமா?—அதிகமாகக் கிடைக்கும் பணத்தைக்கொண்டு, அதிக உற்பத்திக்கான ஏற்பாடுகள் செய்யப்படுமாம்.

டாடா கம்பெனியிலிருந்து தயாராகும் எஃகுக்குத்தான், இந்தச் சலுகை.

'அதிக உற்பத்திக்கான திட்டத்துக்காக' டாடா அமெரிக்காவுக்குப் போயிருக்கிறார், கடன் கேட்டு வாங்கிவர!

டில்லிபீடமும் விலையை உயர்த்தித் தருகிறது.

இப்படிப் பெருகப்போவதால் வரும் லாபம் யாருக்குக் கிடைக்கும் — சர்க்காருக்கா? அல்ல! அல்ல!! டாடாவுக்குத்தான்.

அமெரிக்காவில் பணம் கேட்க அவர் பறந்திருக்கிறார்! இங்கே, அவசரமாக இந்த ஏற்பாட்டைச் செய்கிறது, நேரு ஆட்சி!!

யோகம் அடிக்கிறது, டாடாவுக்கு.

★ உருளைக்கிழங்கும் உபதேசியார்களும்

"பாபம்! மகாபாபம்! கர்த்தர் உங்களைக் கடுமையான நரகத்திலே தான் தள்ளுவார். வேதத்தை மீறுகிறீர்கள், பரமபதத்தைச் சேர மாட்டீர்கள். தேவனைத் துச்சமென்று எண்ணி நாசமாகிப்போகிறீர்கள்."

கண்ணீர்கூடப் பொழிகிறார் கர்த்தரின் பூஜாரியாக உள்ளவர். பொறி பறக்கிறது பேச்சில். தன் கண் முன்னே, கர்த்தர் கடுங்கோபத்துடன் நிற்பது போலவும், "என் பாலகர்களைத் தீய வழியில் செல்லாமல் தடுக்கும் திறனும் உரிமையும் அருளினேனே, என் மக்கள் பாபப் படுகுழி நோக்கிச் செல்லும்போது தடுத்து நிறுத்தவில்லையே, இதற்கோ உன்னை என் அருள் பெற்றுத்தரும் ஆலய அதிபனாக்கினேன்" என்று கேட்பதுபோலவும் அவர் எண்ணுகிறார். உள்ளம் உண்மையிலேயே பதறுகிறது. மக்கள் உலுத்தர்களாகிவிட்டனரே என்று உபதேசியார் ஆயாசப்படுகிறார். "திருச்சபையிலே திரு அருளின் மகிமைபற்றி, எத்தனை எத்தனை உள்ளமுருக்கும் உபதேசங்கள் செய்தோம், எல்லாம் விழலுக்கிறைத்த நீராயிற்றே; விநாசம் வருவதறியாது மக்கள் விபரீதப் போக்கிலே செல்கிறார்களே! ஐயன் அருள்பாலிப்பாரா! அவருடைய வேதத்தை மீறும் மாபாவிகளைச் சும்மா விடுவாரா! என்னே காலக் கொடுமை! ஏன் பிறந்ததோ இந்த அநியாய புத்தி!" — என்று அவர் ஆயாசப்படுகிறார்.

ஒப்புக்காக அல்ல! ஊரார் மெச்சிக்கொள்வதற்காகவோ, அச்சம் கொண்டு அடிதொழவேண்டும் என்பதற்காகவோ அல்ல; உண்மையாகவே அவருக்குப் பயம் — தேவ கட்டளை மீறப்படுகிறது என்று.

அவர் என்றால் ஒரே ஒரு உபதேசியார் மட்டுமல்ல. உபதேசியார்கள் அனைவருமே கிளம்பிவிட்டனர், மக்களைப் பாபப்பாதையிலே செல்லவிடாது தடுத்திட! பரமண்டலத்திலே உள்ள பிதாவின் பாதாரவிந்தத்தை இழந்துவிடாதீர்கள், சுட்டுச் சாம்பலாக்கும் பாழ் நரகு சேராதீர், பாபம் புரியாதீர் என்று உருக்கமாகக் கேட்டுக்கொள்கின்றனர்.

மக்கள் செய்த பாபம் என்ன? உபதேசியார்கள் கண்டிக்கத்தக்க பாபம் என்ன புரிந்தனர்?

உருளைக்கிழங்கு தின்றனர்!!

ஆமய்யா ஆம்! விகடமல்ல, வேடிக்கை அல்ல, மக்கள் செய்த பாபம், உருளைக்கிழங்கு சாப்பிட்டதுதான்!

உபதேசியார்கள், குய்யோ முறையோ என்று கூவி, ஆகுமா அடுக்குமா என்று ஆர்ப்பரித்து,

அண்ணாதுரை

படுநாசம் சம்பவிக்கும் என்று அச்சமூட்டி, பாவிகளாகாதீர் பரமனை இகழாதீர், வேதத்தை மீறாதீர், சாத்தானுக்கு இடமளிக்காதீர், சர்வேஸ்வரனின் கோபத்துக்கு ஆளாகாதீர் என்று கொதித்தெழுந்து கூறினது, உருளைக்கிழங்கு சாப்பிட்டதற்காகத்தான்!

வரலாற்று உண்மை — கட்டுக்கதை அல்ல—புராணமல்ல!

உருளைக்கிழங்கு — எங்கும் சர்வசாதாரணமாக இன்று காணக்கிடக்கிறது—ஆனால் முன்பு, இந்தப் பண்டம் உலகினரால் உணவுப் பொருளாகக் கொள்ளப்பட்டதில்லை. காட்டிலே மேட்டிலே விளைந்துகிடந்த கிழங்கு. அதை முதன் முதலில் தென் அமெரிக்காவில், பெரு எனும் நாட்டிலே கண்டனர், மேனாட்டினர். அவர்கள் அங்கு பொன்னும் மணியும், புதையலும், புதை பொருளும் தேடிடச் சென்றனர்—இந்தக் கிழங்கைக் கண்டனர்—உண்டு பார்த்தனர்—உருசி அறிந்தனர்—எனவே இதுநாள்வரை தங்கட்குத் தெரியாமலிருந்துவந்த ஓர் விசித்திரக் கிழங்கு கிடைத்தது என்று மகிழ்ந்து, தத்தமது தாயகத்துக்கு அதனைக் கொண்டுவந்தனர் — பயிரிட்டனர் — மக்களுக்கு இந்தப் புது உணவுப்பொருளைத் தந்தனர். அப்போதுதான், ஸ்காத்லாந்து நாட்டுப் பாதிரிமார்கள் பதறினர், கதறினர், உருளைக்கிழங்கைச் சாப்பிடக்கூடாது, வேதத்துக்கு விரோதம் என்றனர்!

*

"நமது வேத புத்தகத்தில் உருளைக்கிழங்கு பற்றிய குறிப்பு இருக்கிறதா?"

"இல்லை"

"உருளைக்கிழங்கு மனிதருக்கு உணவாக வேண்டுமென்று பரமபிதா விரும்பி இருந்தால் வேதபுத்தகத்திலே குறிப்பு இருக்குமல்லவா!"

"இருக்கும்..."

"இழுத்தாற்போல் பதில் கூறாதே, இழிவும் பழியும் தேடிக்கொள்ளாதே! உருளைக்கிழங்கு என்ன தெரியுமா?"

"உருளை உருளையாக இருக்கிறது, வேக வைத்தால் மாவுமாவாக வருகிறது. உருசியாகவும் இருக்கிறது"

"பாபிகள்! நாக்கு ருசியாலேதானே, மனித குலமே நாசமாயிற்று. ஆதாமும் ஏவாளும் பாப ஜென்மமானது எதனால்? நாதன் கட்டளையைவிட நாவின் உருசி பெரிது என்று கொண்டதால்தானே! பரமன் தீண்டாதே என்று கட்டளையிட்டும் தீஞ்சுவைக் கனி என்றெண்ணி பாபப்பழத்தைத் தின்றதால்தானே அவர்கள் பாபஜென்மம் ஆயினர். அதே பழம்தான் இது! உருளைக்கிழங்கு, சாத்தான் சரக்கு!"

இவ்விதம் வாதாடினர் உபதேசியார்கள்.

மக்களுக்கோ மருட்சியாகவுமிருக்கிறது, சந்தேகமாகவும் இருக்கிறது.

ஒரு கிழங்கு தின்றாலா பாபம்? என்றும் கேட்டனர், ஒரு பழம் தின்றதால்தானே பாபமே ஆரம்பமாயிற்று என்றும் எண்ணிக்கொண்டனர். உருளைக்கிழங்கோ, உபதேசியார்கள் ஊரார் மனதை மருட்டியும்கூட, மக்களின் நாவை வென்றது! உணவுப் பொருளாயிற்று.

காடுகளில் — குகைகளில், மரப்பட்டைகளைத் தரித்துக்கொண்டு, மண்டை ஓடுகளை மாலையாக அணிந்துகொண்டிருந்த காட்டுமிராண்டிக் காலத்துச் சம்பவமல்ல, மணிமுடி தரித்த மன்னர்கள், கோட்டை கொத்தளம் கட்டி ஆண்ட பிரபுக்கள், கலம் ஏறிக் கடல் கடந்து சென்று வாணிபம் நடத்திய செல்வர்கள், உலவிய நாட்களில். 1580ம் ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சி!

தற்செயலாகத்தான் உருளைக் கிழங்கு கண்டுபிடிக்கப்பட்டது.

நாளாவட்டத்திலேதான் அதனுடைய நானுவிதமான உபயோகம் புரிந்தது.

பல ஆண்டுகள் பரீட்சை பார்த்தான பிறகுதான், உருளை, பல்வேறு நாடுகளிலே பயிரிடப்பட்டது,

முதன் முதலில் ஸ்பெயின் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட உருளைக் கிழங்கு, மெள்ள மெள்ள இந்நாலி சென்றது; பிறகு இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகளில் பரவிற்று, அப்போதுதான் உபதேசியார்கள், வேதத்தில் கூறப்படாத விபரீதப் பண்டம் என்று கண்டித்துப் பேசினர், அயர்லாந்து நாட்டுப் பாதிரிகளோ, பக்தியையும் யூகத்தையும் சம எடையாக்கி, உருளைக் கிழங்கு 'பாபப் பண்டம்'தான், எனினும் புனித நீர் தெளித்துப் பாபத்தைக் கழுவிவிடலாம் என்று கூறி, உருளை பயிரிடப்பட்ட வயல்களில், 'மந்திர உச்சாடனம்' செய்தபடி 'புனித நீர்' தெளித்தனராம்!

மக்களும் மருட்சி நிலையைக் கடந்தனர்—மன்னர்களோ உருளைக் கிழங்குக்கு ஆதரவு திரட்ட முன் வந்தனர்!

பேரரசன் பிரடரிக் என்பான், தன் அரண்மனைத் தோட்டத்திலேயே உருளைக்கிழங்கு பயிரிட்டான்! ஊர் மக்கள் உள்ளத்தை உலுக்கிக் கொண்டிருந்த பயம் போயிற்று.

பிரன்ச்சு மன்னன் மனைவி, உருளைச் செடியின் பூங்கொத்தினைத் தன் தலையணியில் செருகி, அலங்காரம் செய்துகொண்டாள்!

இங்ஙனம், உபதேசியார்களால் சபிக்கப்பட்ட உருளைக் கிழங்கு ஊராள்வோரால் பராமரிக்கப்பட்டது. விஞ்ஞானிகள், அந்தக் கிழங்கின் தன்மைபற்றியும் நன்மைபற்றியும் எடுத்துரைத்தனர்—பயங்கரப் பகை ஒழிந்து, உருளை ஊராரிடம் நிலைத்திடத் தொடங்கிற்று.

மதத் தலைவர்கள், எதை எதை எல்லாம் எதிர்த்தனர், எதெதற்கு வேதத்தில் ஆதாரம் இருக்கிறதா என்று தேடினர், எதெதற்கு மக்களிடம் 'பாவ புண்ணியம்' பேசி மிரட்டினர், எவ்வளவு காலம் வரையில் அவர்களுக்கு இந்த ஆதிக்கம் இருந்தது என்ற உருசிகரமான உண்மை, உருளைக் கிழங்குமூலமும் தெரிகிறது!

வாரன் ஹேஸ்டிங்ஸ் இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக இருந்தபோதுதான், இங்கு முதன்முதலாக உருளைக்கிழங்கு கொண்டுவரப்பட்டதாம். அப்போது அது கிடைத்தற்கரிய 'ராஜபோஜனம்' என்று கருதப்பட்டது.

பம்பாய் கவர்னருக்கு வாரன் ஹேஸ்டிங்ஸ் எப்போதாவது ஒரு கூடை உருளைக் கிழங்கு அனுப்பி வைப்பாராம்! கவர்னர், உடனே ஒரு தனி விருந்து ஏற்பாடுசெய்து, பிரமுகர்களையும் ஆட்சியில் உடனிருப்போரையும் அழைத்து, உருளைக் கிழங்கு விருந்தளிப்பாராம்!

ஸ்காத்லாந்து நாட்டுப் பாதிரிமார்கள் கண்டித்தது போலவே, இங்கு வைதீகப் பார்ப்பனர், உருளைக் கிழங்கு 'நீசஉணவு' என்று கண்டித்தனர்—இன்றோ......!

இந்தியாவில் சுமார் பல இலட்சம் ஏகரில் உருளை பயிரிடப்படுகிறது.

திராவிடத்தில் உதகைப் பகுதியில் உயர்தரமான உருளைக்கிழங்கு பயிராகிறது; மைசூரிலும் உண்டு. இன்னமும் மற்ற நாடுகளைப்போல வளமான முறையிலே உருளை இங்கு பயிரிடப்படவில்லை. விளையும் கிழங்கிலும் ஆண்டொன்றுக்கு பதம் கெடுவதால் இரண்டு கோடி ரூபாய் பெறுமானமுள்ள உருளைக் கிழங்கு நாசமாகிவிடுகிறதாம். விஞ்ஞான முறைகளைக்கொண்டு, இந்த நாசத்தைத் தடுத்திடவும், விளைவினை அதிகரிக்கவும், வழிவகைகள் கூறப்படுகின்றன! அஞ்ஞானிகளின் அக்ரமம் என்று கண்டிக்கப்பட்ட உருளைக்கிழங்கு, இன்று எங்கும் பயன்படுகிறது. மேனாடுகளில், உணவுக்காகமட்டுமல்லாமல். வேறு தொழில்துறைக்குரிய வசதிகளையும் உருளைமூலம் பெறுகிறார்கள் என்று கூறப்படுகிறது. நித்தநித்தம் பொரித்தோ, வறுத்தெடுத்தோ, கூட்டாக்கியோ, குழம்பாக்கியோ, உருளையை உண்ணுபவர்களிலே, எவ்வளவு பேருக்கு உருளைக்கிழங்குக்கு உபதேசியார்கள் கொடுத்த சாபம்பற்றியும், மூட்டிய எதிர்ப்புப்பற்றியும் தெரியும்!

புதிதாகத் தோன்றும் எதற்கும் இடமளிக்கக்கூடாது என்ற'பொன்னு' குணம்கொண்டவர்கள் மதவாதிகள்! ஆனல், ஒவ்வொன்றிலும், அவர்கள் தோல்விதான் கண்டனர்! கேவலம், உருளைக் கிழங்கினிடம்கூடத் தோற்றிட வேண்டித்தான் வந்தது!

ஒவ்வொரு கட்டத்திலும் தோல்வி கண்டாலும், மதத் தலைவர்களும் அவர்களுடைய பிடியில் சிக்குண்டு கிடக்கும் ஏடுதாங்கிகளும் ஏதுமறியாதாரும், புதுமை அரும்பும்போதெல்லாம் எதிர்க்கக் கிளம்பாமலிருப்பதில்லை! போனது போக, மீதமிருப்பதாவது நிலைக்குமா என்ற ஆசையும், அடியோடு அத்தனையும்போய்விட்டால் என்ன செய்வது என்ற அச்சமும் அவர்களைப் பிடித்தாட்டுகிறது.

எந்த எத்தன் தான் செய்யும் அக்ரமத்துக்கு மூடி போட விரும்பினாலும் மத ஏடுகளின் பின்னால்போய் ஒளித்துக்கொள்வதும், மதத்தைக் காப்பாற்றுவதாகக் கூறிக்கொண்டு, அவர்கட்கு 'அபயம்' அளிக்க, 'அருளாளர்கள்' என்ற சின்னத்தைச் சூட்டிக் கொண்டிருப்போர் முன்வருவதும், இன்றும் காணக் கிடக்கும் 'கண்ணுவி'க் காட்சியாகத்தான் இருக்கிறது, விஞ்ஞானம் எத்துணை

அடிகளார் இறங்குமுகம்

தமிழ் நாட்டில், தமிழில் அர்ச்சனை நடைபெறவேண்டுமென்று கூறி, அறப்போர் தொடுக்கவும் அஞ்சேன்! அரன்மீதாணை! என்று முழக்கமிட்டுவந்த குன்றக்குடி அடிகளார், வடமொழி அர்ச்சனையும் இருக்கட்டும், தமிழ் அர்ச்சனையும் இருக்கட்டும் யாராருக்கு எதெது விருப்பமோ அந்த மொழியில் அர்ச்சனை நடைபெறட்டும் என்று கூறுகிருர்! அகோபில மடம் வெல்கிறது! அரகர நமப்பார்வதி பதயே நம, இறங்கு முகமாகிறது!!

பெரிய வெற்றிகளைப் பெற்று மத வாதிகள் உட்பட, மனிதகுலமத்தனையும், புதிய வசதிகளையும் இன்பத்தையும் பெறுவதற்கான வழி கோலியபோதிலும், தாம் கற்றதே மெய்ஞ்ஞானம், மற்றதெல்லாம் அஞ்ஞானம் என்றும், தாம் கூறுவதே அருட்பா, மற்றையோர் மொழிவதெல்லாம் மருட்பா என்றும் பேசிவரும் மதத்துறைத் தலைவர்களைக் காண்கிறோம். பெரிய இடத்திலிருந்து இடியும் அடியும் கிடைக்கும்போது, துடைத்துக் கொள்வதும், மற்றையோர் உண்மையை உரைக்கும்போது உறுமிக் கொண்டு கிளம்புவதும் இவர்தம் 'வித்தை'யாகிவிட்டது.

சின்னாட்களுக்கு முன்பு நேரு பண்டிதர் பளீர் பளீர் என்று அறைவதுபோல, விண்ணை அண்ணாந்து பார்த்து, அது விளையும் இது நேரும் என்று பேசும் வீணர்களைக் கண்டித்தார்; ஜோதிடத்தைச் சாடினார்; இரண்டு கோடி பேர் இருந்தபோது மனு சொன்னதை முப்பது கோடி மக்களாகப் பெருகிவிட்ட இந்த நாட்களிலே வலியுறுத்துவது மடைமை என்றார், மாட்டுவண்டிக் கால மனப்பான்மை விமானயுகத்துக்குப் பொருந்துமா என்றுகேலிபேசினார். வாய்திறந்தனரோ, திருவாய்மொழியும் தேவாரமும் ஓதினோம், இனி உலகில் ஓதத்தக்கதும் உணரத்தக்கதும் யாதுளது என்று வீராப்புப் பேசும் வித்தகர்கள்! யானைமீதேறிச் செல்பவன் வெற்றிலைச் சாற்றினை மேலே உமிழ்ந்தால், தமது பட்டாடைக்கு அவர்தரும் சந்தனாபிஷேகம் அது என்று எண்ணிக்கொள்ளும் பான்மை போல், கடவுட்கொள்கையிலிருந்து கைரேகைக்காரரின் எத்துவரையில் கண்டித்து நேரு பண்டிதர் பேசும்போது, கண்மூடி மௌனியாகி இருந்துவிட்டு, அதுபோன்ற கருத்துகள், மேலிடம் சிலவற்றிலே மட்டும் இருந்தால் போதாது, மக்கள் மனதிலேயும் இடம்பெற வேண்டும் என்று நமது தோழர்கள் பேசிவரும்போதுமட்டும்,சங்கநாதம் செய்வதும், சாபம் கொடுப்பதும் சாடி சொல்வதுமாகக் கிளம்புகிறார்கள்! மோதிக்கொள்கிறார்களா பாருங்கள் நேருபண்டிதருடன்!! நம்மீது பாய்வதிலே மட்டும் எவ்வளவு சூரத்தனம் காட்டுகிறார்கள் என்பதையும் பாருங்கள்—அவர்தம் இயல்பு தெரியும். உருளைக்கிழங்கு பாபப்பண்டம்' என்று சபித்துப் பேசி மக்களை மிரட்டினரே உபதேசியார்கள். ஊராளும் நிலை பெற்றோர், உருளைக்கிழங்கு உண்பது நல்லது என்று கூறிட முன்வந்ததும், என்ன செய்தனர்! ஏ! சாத்தானின் சகாவே! வேத நிந்தகனே! உன் கட்டளையைக் கேளோம்! கர்த்தரின் ஆணையை மீறோம்! என்றுகூறி, உருளைக் கிழங்கு பயிரிடப்பட்ட வயலில் சென்று அழித்தனரோ! உண்டு உருசிபார்த்து, நன்று! நன்று! என்று நவின்றனர். இதுதான் அவர்தம் இயல்பு.

ஜூன் 20ந் தேதி, அபூர்வமான முறையில் சூரிய கிரஹணம் ஏற்பட இருக்கிறது. 1250 ஆண்டுகளாக ஏற்பட்டதில்லையாம் இதுபோன்ற கிரஹணம். இனி இதுபோல 2168ல் தான் ஏற்படுமாம், சில இடங்களில் ஏழு நிமிடங்களும் சில இடங்களில் ஐந்து நிமிடங்களும் முழுச் சூரியக் கிரஹணம் இருக்கப் போகிறது. சிலோன், அந்தமான் தீவு, பர்மா, தாய்லாந்து, வியட்நாம், பிலிப்பைன் ஆகிய இடங்களில் மட்டுமே இந்த அபூர்வ சூரிய கிரஹணம்! இதை உலக விஞ்ஞானிகள் கிடைத்தற்கரிய ஓர் வாய்ப்பாகக் கொண்டு,அன்று ஆராய்ச்சி நடத்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டுள்ளனர்.சிலோனில் இதற்காக விஞ்ஞானிகள் முகாம் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஏழு நிமிட நேரம், முழு இருட்டு, பகலில்! கதிரவன் மறைகிறான், காரிருள் கப்பிக்கொள்கிறது, ஏழு நிமிடம் வரையில்! இதுபோல ஏற்படுவது அபூர்வம், ஆகவே, நீண்டகாலமாக பரீட்சித்துப் பார்க்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டுள்ள விஞ்ஞான தத்துவங்களைக்குறித்து ஆராய்ச்சி நடத்தஇது பொன்னான வாய்ப்பெனக்கொண்டு விஞ்ஞானிகள் புறப்படுகிறார்கள். ஐன்ஸ்டின் கூறிச்சென்ற ஒரு கோட்பாடு பற்றிய புது உண்மை இந்த ஆராய்ச்சி மூலம் கிடைக்குமென்று நம்புகிறார்கள். புதுஉண்மையாவது கிடைக்கும், தவறான எண்ணம் ஏதாவது இதுவரை இருந்துவந்தால் அது களையப்படுவதற்கான வாய்ப்பாவது கிடைக்கும். விஞ்ஞானிகள் இவ்விதம் பணியாற்றக் கிளம்புகிறார்கள்; மற்றவர்களை அஞ்ஞானிகள் என்று கூறிக்கொண்டிருக்கும் பக்தர் குழாம் என்ன செய்ய இருக்கிறது தெரியுமோ! விஞ்ஞானிகள் போலவே அவர்களும் 'பரபரப்பாக'க் காரியமாற்றக் கிளம்புகிறார்கள்! தீர்த்தமாடி புண்யம் தேடப்போகிறார்கள்—வடக்கே குருக்ஷேத்திரத்திலே சென்று, 'புண்யம்' தேடப்போகிறார்கள் இதற்காக இவர்கள் 'முஸ்தீபு' செய்து கொண்டுள்ளனர். புண்யம் சம்பாதித்துக்கொண்டுவர அவர்கள் நடத்தும் புனிதயாத்திரையின்போது, காலரா,பிளேக்முதலிய கொடிய நோயால் தாக்குண்டு அவர்கள் 'கயா'ஆகிவிடக்கூடாதே என்பதற்காகச் சர்க்கரார், "போகிறதே போகிறீர்கள், காலரா பிளேக் தடுப்பு ஊசி போட்டுக்கொள்ளுங்கள்" என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

தவஞானிகளுக்கும் விஞ்ஞானிகளுக்கும் மனப்பான்மையில் உள்ள மகத்தான வித்யாசத்தைப் பாருங்கள்.

விஞ்ஞானிகள், தமக்காக அல்ல, உலகுக்குப் புது உண்மை அளிக்கலாம், அதன் மூலம் புது நன்மை பெறட்டும் என்ற விரிந்து பரந்த, தன்னலமற்ற, தூய எண்ணத்தால் உந்தப்பட்டு, ஆராய்ச்சி செய்யச் செல்கிறார்கள்; பக்தர் குழாமோ தாம் செய்த பாபத்தைத் தொலைத்துத் தலைமுழுகிவிட்டு, புண்ணியம் தேடிக்கொள்ளச் செல்கிறார்கள். பண்டாவிடமிருந்தும் முதலைகளிடமிருந்தும் பலவகையான திடீர் வியாதிகளிடமிருந்தும் தப்பி, அவர்கள் திரும்பினால், அவர்களால்,

வெளிவந்துவிட்டது!
தோழியர்
சத்தியவாணிமுத்து
எழுதிய
எரிக்கப்பட்டாள்
எனும்
வரலாற்று நூல்.
விலை ரூ. 1-0-0
கழிவு 25%. செலவு இனாம்.
மதி மன்றம்,
31, பிடாரியார் கோயில் தெரு
சென்னை-1

உலகுக்கு ஏற்படப்போகும் நன்மை என்ன?

புண்யம் பெற்றாலும், அது அவர்களுக்குப் பயன்படும் — இங்கல்ல —அங்கு! எங்கு? சென்றவர் திரும்பாத ஜெகஜோதிபுரத்தில்!! விஞ்ஞானிகள் நடத்த இருக்கும் ஆராய்ச்சியின் பலனோ, அனைவருக்கும் கிடைக்கும் — அனைவருக்கும்! விஞ்ஞானத்தைச் சபிக்கும் இந்த 'மெய்ஞ்ஞானிகளுக்குஞ் சேர்த்து! சூரிய கிரஹணம் என்றவுடன், யாருக்கு உலகுபற்றி, உண்மையைப்பற்றி, மக்கட் சமுதாயத்துக்கு நன்மை தேடுவதுபற்றி எண்ணம் பிறக்கிறது? விஞ்ஞானிகளுக்குத் தான்! மதவாதிகளின் எண்ணம், உருளைக்கிழங்கு முதற்கொண்டு ஊராரின் உடைமை ஒரு சிலரிடம் குவிவது கூடாது என்பதுவரையில், எதுவாக இருந்தாலும், அவர்களின் பரணையில் கிடக்கும் பழைய ஏடுகளிலே ஆதாரம் இருக்கிறதா என்று தேடச்சொல்கிறது. ஒவ்வோர் முறையும் காலம் ஓங்கித் தாக்குகிறது, எனினும் சுபாவம் சாகமறுக்கிறது. திருமண முறை விவாக விடுதலை, போன்றவை குறித்து, புதிய சட்டம், இவர்களின், கூக்குரலுக்காக நின்றுவிடவில்லை. நிறைவேறிவிட்டது!

எனினும், எப்பாடுபட்டாவது' பாமர மக்கள் மனதிலே பீதி மூட்டியாவது, பழைமையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம்மட்டும் சாகமறுக்கிறது. நமதுபணி, மக்கள் மன்றத்தில், மதவாதிகள், கொடுமையும் மடைமையும் நிரம்பிய கொள்கைகளுக்காக வாதாடிப் போராடி வந்த வரலாற்றினையும், ஒவ்வோர் முறையும், அறிவு வென்றதன் அருமையையும் எடுத்துரைத்து, பாமரத் தன்மையைப் பக்தி என்றும், தெளிவற்ற தன்மையை தெய்வ நம்பிக்கை என்றும் நம்பிக் கொண்டிருக்கும், வெள்ளை உள்ளத்தினரை, விழிப்படையச் செய்வதே யாகும். உருளைக்கிழங்கு, வெற்றி பெற்றிருக்கும்போது, உண்மைக்காகப் போரிடும் ஆண்மையாளர்கள் வெற்றிபெறாமலாபோவார்கள்!!

★

3-பக்கத் தொடர்ச்சி

கிறது நிர்வாகம்!! இலாடம் கிடைக்கவில்லை, குதிரை கொள்ளு தின்கிறது, கொட்டிலில் கொழுக்கிறது; வண்டியும் மேட்டில் கிடக்கிறது!! ஆணி கிடைக்கவில்லை, அதனால் ஆயிரம் ரூபாய் போட்டு வாங்கிய அழகான படம், பரணையில் கிடக்கிறது! சாவி இல்லை, எனவே பூட்டு மூலையில் போட்டு வைக்கப்பட்டிருக்கிறது! ஓடு கிடைக்கவில்லை, ஆகவே தளத்துக்குத் தேவையான சாமான்கள் துருப்பிடித்துக்கொண்டு கிடக்கின்றன! பாய்மரமில்லை, எனவே கப்பல் பாழாகிக்கொண்டிருக்கிறது! கூந்தல் இல்லை, மலர் வாடி உதிர்கிறது!! இப்படி இருக்கிறது அணைத்திட்டத்துக்கென்று பெரும் பொருள் செலவிட்டு வாங்கிய யந்திரங்கள், சிறு துணைச் சாமான்கள் கிடைக்காததால், தூங்கித் துருப் பிடித்துப் போகும் காட்சி! எந்த நாட்டிலாவது இந்த அக்ரமம் நடக்குமா! இவ்வளவு திறனற்று, அக்கரையற்று, எந்தத் தனிப்பட்ட முதலாளியாவது நடந்துகொள்வானா? பொது மக்களின் கோபத்துக்கு ஆளாக நேரிடுமே, அவர்களுக்குப் பதில் கூற வேண்டி வருமே என்ற அச்சம் கொண்ட எந்த சர்க்காரிலாவது, இப்படி ஒரு ஊழல் நடைபெறுமா? இந்நேரம், பொதுமக்கள் சீறியிருப்பர், பொறுப்புவாய்ந்த பத்திரிகைகள் தேளாகி இருக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவியிலிருந்து விரட்டப்பட்டிருப்பார்! இங்கு? இதோ பண்டிதரின் அடுத்த ஆவடி, ரஷ்யாவில் என்று வேடிக்கை காட்டுகிறார்கள், பணம் பாழாகிறது, ஊழல் தலைவிரித்தாடுகிறது.

இது மட்டும்தான் என்று எண்ணிவிட வேண்டாம் — இது இப்போது தெரியும் ஊழல், இது போல் ஏராளம்!! ஆட்சி—அப்பழுக்கற்று, அதைக் குறைகூறுவது கூடாது, என்று கூறுகிறார்களே காங்கிரஸ் நண்பர்கள், சரியாகுமா!!

அரசாங்க நிர்வாகம் ஒழுங்காக இல்லை.

நாடக மேடையில் நடிக்கப்படும் கேலிக் கூத்தாக இருக்கிறது, சர்க்காரின் போக்கு!

பொதுமக்களின் பணம் விரயமாகிறது.

இவ்விதம் சொன்னால் காங்கிரஸ், நண்பர்களுக்குக் கண்கள் சிவந்து விடுகின்றன!

அரசாங்கம் திறமைக்குறைவாக நடந்து கொள்ளுகிறது.

என்று கூறுங்கள் பக்கத்திலே கல் இருக்கிறதா நம் தலைமீது தூக்கிப்போட, என்று தேடுவார்கள், தெளிவை இழந்துவிடும் அளவுக்குத் தேசியம் கொண்டுள்ள காங்கிரஸ்காரர்கள்.

முட்டாள்தனம்!

என்று சொல்லுங்கள்...ஏ! அப்பா! ஆவேசம் வந்தவர்போல் ஆடி, அடிப்போம், உதைப்போம் என்றெல்லாம் ஏசுவர்.

ஆனால் இவ்வளவும் உண்மை! நாம் சொன்னால் கோபம் கொப்பளிக்கும்—அடக்கிவைக்க முடியாமல், ஒரு காங்கிரஸ் ஏடு நேரு ஆட்சியைப் பற்றிச் சில திங்களுக்கு முன்பு இவவிதமாகவெல்லாம் கூறி இருக்கிறது, காங்கிரஸ் நண்பர்கள் போலவே, இந்த ஏடு எமது பண்டிதருக்கு உலகமே பாதபூஜை செய்கிறது என்று பராக்குக் கூறுவது தான்! எனினும், அதனாலேயே சகித்துக்கொள்ள முடியாமல், ஆட்சி கேலிக்கூத்தாகஇருக்கிறது பொதுமக்கள் பணம் விரயமாகிறது, மௌடிகத்தனமாக சர்க்கார் நடந்துகொண்டிருக்கிறது, திறமைக்குறைவாக நடந்துகொண்டிருக்கிறது, என்று கண்டித்து எழுதிவிட்டது! முட்டாள் தனத்துக்கு முதல் பரிசு பெறுகிறதாம் சர்க்கார்!! நாம் கூற அஞ்சுகிறோம், ஆனால் இதோ, 'கல்கி'யின் கண்டனத்தைப் பாருங்கள்:—

ஏழு வருஷ காலமாகப் பாங்கிச் சிப்பந்திகள் கிளர்ச்சி செய்யும் போதெல்லாம் இந்திய சர்க்கார் பாங்கி முதலாளியின் கட்சியில் இருக்கிறார்கள் என்று புகார் சொல்லி வந்தார்கள். இதை அவ்வளவாகப் பொதுமக்கள் நம்பவில்லை.

ஆனால் ஸ்ரீ வி. வி. கிரியின் ராஜிநாமா மேற்படி புகாரை இதுவரை நம்பாதவர்களையும் ஓரளவு நம்பும்படி செய்துவிட்டது."

*

இந்த பாங்கிச் சிப்பந்திகள் தகராரு விஷயமாகக் கையாளப்

திருமண அழைப்பு

'முரசொலி' ஓவியர் கி. நடராஜன்—தனலட்சுமி வாழ்க்கை ஒப்பந்தம் சேலம் டவுன் புதுத்தெரு நெ-30, இல்லில் 2—6—55 வியாழன் காலை மணி 10-30க்கு சேலம் A சித்தையன் தலைமையில் நடைபெறும்.

பட்டிருக்கும் மௌடிகத்தனம் எல்லாவற்றையும் தூக்கி அடிப்பதாக இருக்கிறது. அரசாங்க நிர்வாக சரித்திரத்தில் திறமையின்மைக்கும் மௌடிகத்துக்கும் முதற்பரிசு கொடுப்பதாக இருந்தால் இதற்குத்தான் கொடுக்கவேண்டும். டிரிபுனலுக்குமேல் டிரிபுனல் நியமிப்பது விசாரணைக்குமேல் விசாரணை நடத்துவது, இதற்காகக் கோடிக்கணக்கில் பொதுஜனங்களின் பணம் விரயமாவது, கடைசியாக வெளியாகும் தீர்ப்பை அவசர உத்தரவுபோட்டு நிறுத்தி வைப்பது என்றால் இவையெல்லாம் உண்மையில் அரசாங்க நிர்வாகத்தைச் சேர்ந்ததா, நாடக மேடையில் நடிக்கப்படும் கேலிக்கூத்தா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

*

இப்போது என்ன சொல்கிறார்கள் நம்மீது எரிந்துவிழும் காங்கிரஸ்காரர்கள்.

கோபுரமேறிக் கொடி காட்டுவது பற்றிக் குதூகலிப்பது இருக்கட்டும், நண்பர்களே! இதோ கூரை ஏறிக் கோழிபிடிக்காததற்கு என்ன சமாதானம் சொல்கிறீர்கள்!

உலகம் புகழ்கிறது என்கிறீர்கள் —மெத்தச் சந்தோஷம் —ஆட்சியிலே இந்த அவலட்சணம் இருக்கிறதே அதற்கென்ன சொல்கிறீர்கள்!!

ஊர்க்கோடியில் கோதானம் கொடுக்கிறார் என்று புகழ்கிறீர்கள் இங்கே மாதா மடிபிச்சை எடுக்கிறாளே, இதற்கென்ன சொல்கிறீர்கள்! என்றெல்லாம் கேட்டால் காங்கிரஸ் நண்பர்களுக்கு, வெட்கமும் துக்கமும் சேர்ந்து தாக்கும். வேறென்ன செய்வார்கள், நம்மீது சிறி விழுகிறார்கள்! ஒரு உண்மையைத் தெரிந்துகொள், தம்பி! நம்மீது கோபிக்கிறார்களே தவிர, அவர்கள் மனதிலேயும் உண்மை உறுத்தாமலில்லை. "இந்தப்பாவிகள் நடந்து கொள்வதும், இந்தப் பயல்கள் கேலி செய்வது போலத்தான் இருக்கிறது. பண்டித நேருகூட அடிக்கடி அந்தநாடு இந்த மாநாடு என்று அலைந்துகொண்டிராமல், ஆட்சியை ஒழுங்காக்கி ஊழலை ஒழித்து, நிர்வாகத்தைச் சரிப்படுத்தி, மக்கள் சுபீட்சமடையும் மார்க்கத்தைக் கவனித்தால் நன்றாகத்தான் இருக்கும். அந்தப் பயல்கள் குத்திக் கிளறிக் காட்டும்போது கோபமாகத்தான் இருக்கிறது, ஆனால் ஆற அமர யோசித்துப் பார்த்தால், வெட்கமும் துக்கமுமாகத்தான் இருக்கிறது" என்று அவர்கள் மனம் எண்ணாமலில்லை. அதை மறந்துவிடாதே!! உண்மை, அவர்களையும் நம்பக்கம், மெள்ள மெள்ள ஆனால் நிச்சயமாகக் கொண்டுவந்து சேர்த்துவிடும். அந்தப் பக்குவம் ஏற்படுகிற வரையில், பழித்துத்தான் பேசுவார்கள், பகைவர்போல்தான் நடந்துகொள்வார்கள், நாம்தான் பொறுமையாக நடந்துகொள்ள வேண்டும். குழந்தைபிறக்கும்வேளை நெருங்க நெருங்க, தாயின் கூச்சல் அதிகமாகத்தான் இருக்கும்!!

அன்புள்ள,

அண்ணாதுரை.

வையாவூர் பள்ளி ஆண்டு விழா

11—5—25 மாலை வையாவூர் பஞ்சாயத்துப் பள்ளி விழா, காஞ்சி வட்டார பஞ்சாயத்து அதிகாரி தலைமையில் நடைபெற்றபோது, இராம அரங்கண்ணல், C. V. M. அண்ணாமலை, ஆசிரியர் T. S. வடிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர். மாணவ மாணவிகளின் 'கலையப்பன்' எனும் நாடகம் நடைபெற்றது. D. ராதாகிருஷ்ணன் நன்றி கூறினார்.

*



RE-OPENS: 10th JUNE 1955

S. S. L. C., INTER., B. A., etc.,

(All Parts & Groups)

The Greatest living poet,
BHARATHI DASAN
WILL TEACH YOU TAMIL!

Mrs. JUDITH LOUIS, B.A. (Hons) Vice-Principal.

N. J. DEVADAS, M. A., Principal.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St, Kancheepuram.